404

# செல்வன்
# செந்தமிழ் வாசகம்




30 MAY 1958
MADRAS

TB
031(N)
N58
88928

செல்வன் கம்பெனி.
நாகர்கோவில்

4
2-58

# செல்வன் செந்தமிழ் வாசகம்

## இரண்டாம் படிவம்—சிறப்புப் பகுதி

OFFICE OF THE REGISTRAR OF
30 MAY 1958
MADRAS

ஆசிரியர் :
G. மைக்கேல் பிள்ளை, M.A.
பதிப்பாசிரியர் :
மகாவித்துவான்
மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

[Paper used : 24 lbs. White Printing]

ஜெகசெல்வன் கம்பெனி

ராமவர்மபுரம் நாகர்கோவில் | தெப்பக்குளம் திருச்சிராப்பள்ளி

பதிப்புரிமை]

[விலை { அணு 11 / ந.பை. 69

முதற்பதிப்பு—நவம்பர், 1953
மறுபதிப்பு (1)—1955
மறுபதிப்பு (2)—1957
மறுபதிப்பு (3)—1958

TB
031(Y1)
N58

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE
[Fort St. George Gazette dated 19-5-1954
Supplement to Part I-B, Page 118]

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
88928
...-600 008.

Kabeer Printing Works, Madras (3771)

# முன்னுரை

இச்செந்தமிழ்ப் பாட நூல்கள், முதல் 3 படிவங்களிற் பயிலும் மாணவ மாணவியரின் தமிழறிவு வளர்ச்சியுற்று, அண்மையில் அரசியலார் வெளியிட்டுள்ள பாடத்திட்டத்துக்கியைய மொழித்திறன் பெற்று விளங்க வேண்டுமென்னும் விழுமிய நோக்கங்கொண்டு வெளியிடப் பெறுவனவாகும். இப்பாட நூல்களில் அவ்வப்படிவத்துக்காகக் குறிப்பிடப்பட்டுள்ள செய்யுள், உரைநடைகள் அளவுக்கேற்பத் தரப்பட்டுள்ளன. பண்டைய புலவர், அரசர் முதலியவரைப் பற்றிய செய்திகளும், தமிழ் நாட்டு வரலாற்றையொட்டிய நிகழ்ச்சிகளும், பிறநாட்டு அறிஞர் வரலாறுகளும், நம் நாட்டுக் கலைச் செல்வங்களை விளக்கும் கட்டுரைகளும், விஞ்ஞானக் கலையறிவாற் கண்ட புதுமைகளும், பிற நாடு சென்று புதியன கண்ட அறிஞர் பெருமக்களின் அரிய செயல்களும், மாணவரின் பேச்சுத் திறனை வளர்த்தற்கான உரையாடல்களும் ஏற்ற பெற்றி எடுத்தாளப்பட்டுள்ளன. கற்றற்கெளிமை நோக்கி ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் சொற்பொருள் விளக்கமும், கட்டுரைப் பயிற்சியும், அறிவு விளக்க வினக்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

மாணவரின் தகுதிக்கேற்பச் சொல்லாக்கமும், நடையுயர்வும் அமைந்து, அறிவு வளர்க்கும் சாதனமாக வெளியிடப் பெறும் இப்பாட நூல்களைத் தமிழுலகம் ஆதரிக்குமெனும் உறுதியுடையேன்.

இப்பாட நூல்களை அன்புடன் கருத்தூன்றிப் பார்வையிட்டு, அரிய திருத்தம் பல செய்து, அச்சேற்றப் பெருந்துணையாயிருந்த உயர்திருவாளர் **மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்களுக்கு** என் நன்றி உரித்தாகுக.

ஆசிரியன்

# இரண்டாம் படிவம்—சிறப்பு

---

## பொருளடக்கம்


பாடம் பக்கம்

உரைநடைப் பகுதி

1. பூம்புகார் ... 1
2. மெக்ஸிக்கோவின் பழங்குடிகள் ... 8
3. போப்பையர் ... 16
4. இந்தியத் தொழிலரசர் ... 22
5. கலிங்கப் போர் ... 29
6. பண்டைத் தமிழர் பண்பாடு ... 36
7. ராஜா ரவிவர்மா ... 43
8. மாணவரும் கைத்தொழிற்பயிற்சியும் ... 47
9. குமணவள்ளல் ... 55

செய்யுட்பகுதி

I. வாழ்த்துப் பகுதி : ... 67

II. நீதிப் பகுதி :
1. நீதி நெறி விளக்கம் ... 69
2. நீதி வெண்பா ... 71
3. பழமொழி ... 72
4. குமரேச சதகம் ... 73
5. அறப்பளீசுர சதகம் ... 74

III. கதைப் பகுதி :
ஊதாரியான மகன் உணர்வு பெற்றது ... 76

IV. பல்சுவைப் பகுதி :
1. நீர்மோர் ... 80
2. ஆட்டுக்கும் கதவுக்கும் சிலேடை ... 80
3. எழுத்துச் சுருக்கம் (மதுரை) ... 80
4. பயிர் விளைவு ... 81

# நாட்டு வணக்கம்

ஜன கண மன அதி நாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா
விந்திய ஹிமாசல யமுனு கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாகே
காயே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே! ஜயஹே! ஜயஹே!
ஜய ஜய ஜய ஜயஹே!

# தேசீய கீதம்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிருய்.
நின் திருநாமம், பஞ்சாபையும் சிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.

அது விந்திய ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது;
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.
அவை நின் ஆசியை வேண்டுகின்றன; நின் புகழைப்
பாடுகின்றன;
இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி! வெற்றி! வெற்றி!

# இரண்டாம் படிவம்

## சிறப்புப் பகுதி

### 1. பூம்புகார்

1. பண்டைச் சோழரின் தலைநகராய்க் காவிரி கடலொடு கலக்கும் சங்கமுகத்திற் சிறப்புற்று விளங்கியது **பூம்புகார்ப் பட்டினம்**. அது போகத்துக்கும் புகழுக்கும் இருப்பிடம்; கல்வியறிவு ஒழுக்கங்களிற் சிறந்த பெரியோர் வாழ்ந்த இடம்; இமயம் போன்று உயர்ச்சியும் உறுதியும் வாய்ந்தது; பதியெழுதல் அறியாப் பழங்குடிகள் வசித்த இடம். அப்பட்டினக் குடிமக்கள் பகையச்சமின்றிச் செங்கோல் மன்னன்கீழ் அறிவும் ஆற்றலும் செல்வமும் ஆண்மையும் பெற்று விளங்கினர்கள். வறுமை, மடமை, அடிமைப்பிணி என்பவை அவர்களை அண்டவில்லை. அங்கு அறமும், அன்பும், தொழிலும், வணிகமும், வளனும் சிறந்தோங்கின.

2. இச்சிறப்புக்கள் அமையப்பெற்ற புகார், **மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம்** என்னும் இரு பிரிவுடையது. இரண்டிற்குமிடையே மரமடர்ந்த பொதுநிலம் நாளங்காடிகளைக் கொண்டு விளங்கியது. மருவூர்ப்பாக்கம் பட்டினப்பாக்கத்-

துக்குப் புறத்தேயிருந்தது. அங்குத் துறைமுகத்தையடுத்து யவனர் இருக்கைகளிருந்தன ; பற்பல தொழிலாளரும் பிற நாட்டவரும் இருந்தனர் ; பெரிய பண்டகசாலைகள், மான்விழிபோன்ற சாள-




ரங்களைக்கொண்ட மாளிகைகள், சந்தனம், கற்பூரம், அகில் முதலிய நறும்புகைச்சரக்குகளும் பிற வாசனைப்பொருள்களும் விற்பவர் வீதிகள் இருந்தன. ஒரு தெருவில் நெய்தற்றொழில் புரிபவர்

வாழ்ந்தனர். முத்து, மணி, பொன் முதலியன குவிந்து கிடந்தன. பதினெண் கூலங்கள் விற்கப்படும் கூலவீதிகள் இருந்தன. பிட்டு வணிகரும், அப்பஞ்சுடுவாரும், உப்பு விற்பவரும், வெற்றிலை விற்பவரும் ஒரு புறம் வாழ்ந்தனர்.

3. தச்சர், கன்னர், கொல்லர், சைத்திரிகர், சிற்பாசாரியர், குயவர், தையற்காரர் முதலிய பலவகைத் தொழிலாளரும் அங்கு வாழ்ந்தனர். அவர்கள் வாழ்ந்த இடத்தையடுத்துப் பாணர் வாழிடமிருந்தது. பதநீர் விற்கும் பெண்டிர், மீன் விற்கும் பரதவர், பிட்டு வாணிகர், எண்ணெய் வாணிகர் ஆகியோர் ஒரு புறம் வாழ்ந்தனர். இவ்வாறு, வணிகச் சிறப்புக்கு நிலையமாய் மருவூர்ப்பாக்கம் விளங்கியது. அங்கு இறக்குமதியான பொருள்களும், ஏற்றுமதிக்கான பொருள்களும் குவிந்து கிடந்தன. அவை சோழனது **புலிமுத்திரை** இடப்பட்டு, மூட்டை மூட்டையாய் அடுக்கப்பட்டிருந்தன.

‘ மாரிபெய்யும் பருவம்போல
நீரினின்று நிலத்தேற்றவும்,
நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்,
அளவறியாப் பலபண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி,
அருங்கடிப் பெருங்காப்பின்,
வலியுடை வல்லணங்கினோன்
புலிபொறித்துப் புறம்போக்கி
மதிநிறைந்த மலிபண்டம்
பொதிமூடைப் போரேறி ’

என்ற **பட்டினப்பாலை** என்னும் செய்யுளடிகளால் இச்செய்தி அறியப்படுகின்றது.

4. அகநகராகிய **பட்டினப்பாக்கம்**, அரச-

னும், அரசனைச் சார்ந்தவரும், பிறரும் வாழிடமாய் விளங்க, அரச வீதியும், தேரோடும் வீதிகளும், கடைவீதிகளும், தனவணிகர் மாடமாளிகைகள் உள்ள தெருக்களும், அந்தணர் வீதிகளும், உழவர், மருத்துவர், சோதிடர் வாழ்ந்த வீதிகளும் விளக்கமுற்றன. வளையறுப்பாரும், அரசனைப் புகழும் **சூதர் மாகதர்** முதலியவரும், கூத்தர், கூத்தியர், கணிகையர், பறை கொட்டுவாரும் அங்கு வசித்துவந்தனர். அரண்மனையைச் சூழ்ந்து குதிரைப்பாகர், யானைப்பாகர், தேர்ப்பாகர், மறவர் முதலியோர் வாழுமில்லங்கள் இருந்தன. அழகிய கட்டடங்களும், அகன்ற தெருக்களும் பட்டினப்பாக்கத்தைப் பொலிவுறச் செய்தன.

5. அங்கு ஐந்து மன்றங்கள் இருந்தன. **வெள்ளிடை மன்றத்தில்** சரக்குமூட்டைகள் குவிந்திருந்தன. அவற்றைக் காவல் புரிவதற்குக் காவலர் இல்லை. அவற்றைக் களவால் கவர விழைவாருமில்லை. களவுசெய்யின், களவுசெய்த மூட்டையுடன் அங்கேயே திரிவதன்றி, அதனை எங்குங் கொண்டு செல்லுதல் இயலாது. ஆதலின், அம்மன்றத்தைக் கண்டு, தீயவர் நடுங்கினர். **இலஞ்சிமன்றப்**பொய்கையில் முழுகுபவர், தம் நோய் நீங்கி, உடனலம் பெற்றனர். **கல் நின்ற மன்றத்துள்ள** ஒளி பொருந்திய கல்லை வலஞ்செய்து நிற்கும் பித்தர், நஞ்சுண்டவர், பாம்பு தீண்டப் பெற்றவர், பேய் பிடித்தவர் யாவரும் தம் இடர் நீங்கப் பெற்றனர். **பூதசதுக்கம்** தீயவரைத் தண்டிக்கும் பூதத்தின் இருப்பிடமாய் இருந்தது. "போலித்துறவியரும், பொய்ச்சாட்சி சொல்பவரும், புறங்கூறுபவரும் என் கைப்பாசத்திற்கு இலக்காவர்," என்று அப்-

பூதம் பேரொலியுடன் கூறும். தன் பாசத்திற்பட்டாரை அது புடைத்துண்ணும். இதனுல், தீயவர் அங்குச் செல்ல அஞ்சினர். அப்பால் **பாவைமன்றம்** ஒன்றிருந்தது. அரசன் செங்கோற்பிழைப்பினும், அறங்கூறு அவையத்தினர் நடுவுநிலைமை பிறழினும் அப்பாவை அழுது கண்ணீருகுக்கும்.

6. சிவன் கோவில், முருகன் கோவில், பலதேவர் கோவில், திருமால்கோவில், அருகன்கோவில், புத்தர்பள்ளி முதலியன அவரவர் கொள்கைக்கேற்ப வணங்குவதற்கென அமைக்கப்பட்டிருந்தன. சமயப்பொறுமை மிக்க அரசனும் குடிகளும் சமயப்போர் நிகழ்த்தாது, அன்பும் அருளுமுடையவராய், அறவழியொழுகினர்.

7. அவ்விரு பாக்கங்களுக்கும் நடுவேயிருந்த மரங்களடர்ந்த சோலை, பகற்கடையாகப் பயன் பட்டது. அதனை **நாளங்காடி** என்பர். அங்குள்ள மரங்களையே கால்களாகக்கொண்டு கடைகள் கட்டப்பட்டிருந்தன. அங்குப் பொருள்களை வாங்குபவர் ஓசையும் விற்பவர் ஓசையும் இடைவிடாது கேட்கும்.

8. புகார் பண்டைத்தமிழர் நகரமைப்புக்குச் சிறந்த சான்ருயிருந்தது. பற்பல தொழிலாளரின் இல்லங்களும் அவர் வாழும் தெருக்களும் முறைப்படி அமைந்த திறன் வியக்கத்தக்கது. அது சோழனது செங்கோன்மைச் சிறப்பை விளக்கும் சாதனமாயும், கல்வியும், கலைகளும், தொழில்களும், வாணிபமும், செல்வமும் ஓங்கிய நகராயுமிருந்தது.

### சொற்பொருள் விளக்கம் :

புகார் - முன்னைய சோழரின் தலைநகர்; இன்று காவிரி கடலொடு கலக்குமிடத்தில் சிற்றூராய்க் காட்சியளிக்கிறது. சங்கமுகம் - ஆறு கடலிற்சேருமிடம், போகம் - இன்பம், உயர்ச்சி - உயர்ந்த தோற்றம், உறுதி - அசையாத்தன்மை, பதியெழுதல்-நகரினின்றும் பெயர்ந்து செல்லுதல், பகையச்சம்—பகைவர் படையெடுப்புக் காரணமாக உண்டாகும் பயம், ஆண்மை - வீரம், மருவூர்ப்பாக்கம் - கடற்கரையைச் சார்ந்த புறநகர், யவனர் - உரோம கிரேக்கருக்குத் தமிழர் வழங்கிய பெயர், சாளரம் - பலகணி (சன்னல்), பதினெண்வகைத்தானியம்-நெல், புல், வரகு, தினை, சாமை, இறுங்கு, துவரை, இராகி, எள்ளு, கொள்ளு, பயறு, உழுந்து, அவரை, கடலை, மொச்சை, மூங்கில் நெல், சோளம், காராமணி என்னும் தானியங்கள், வரம்பு - அளவு, ஈண்டி - நெருங்கி, கடி - காவல், வல்லணங்கினோன் - வலிமை மிக்க சோழன், போரேறல் - அடுக்குதல், மறவர் - வீரர், மறம் - வீரம், இடர் - துன்பம், பள்ளி - புத்தர் கோயில், (சைனர் தொழுமிடம் விகாரம் என வழங்கப்படும்) நாளங்காடி - பகற்கடை.

### பயிற்சி :

1. எதிர்ச்சொற்கள் எழுதுக :—அறம், அகன்ற, செங்கோல், ஏற்றுமதி.

2. சொந்த வாக்கியங்களில் அமைக்க :—உயர்ச்சி, வாழிடம், பொய்ச்சாட்சி, உருக்கும்.

### கேள்விகள் :

1. புகார்க் குடிகள் எத்தன்மை வாய்ந்தவர்கள் ?
2. புகாரின் இரு பிரிவுகள் யாவை ?
3. மருவூர்ப்பாக்கத்தில் காணப்படுவன யாவை ?
4. அங்கு வாழ்ந்த தொழிலாளர் யாவர் ?
5. துறைமுகத்தையடுத்து வாழ்ந்தவர் யாவர் ?
6. துறைமுகத்தில் பொருள்கள் எவ்வாறு அடுக்கப்பட்டிருந்தன ?

7. ஏற்றுமதி செய்யுமுன் மூட்டைகளில் எதனைப் பொறித்தனர்?

8. பட்டினப்பாக்கம் யார் வாழுமிடமாயிருந்தது?

9. அங்கிருந்த ஐந்து மன்றங்கள் யாவை?

10. நாளங்காடி எங்கு இருந்தது?

### கட்டுரைப் பயிற்சி :

1. காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பைப்பற்றி ஒரு கட்டுரை வரைக.

2. 'பண்டைத் தமிழரது தொழில்' என்பதுபற்றிப் பத்து வரிகள் எழுதுக.

### இலக்கணம் :

1. முதலாம் படிவத்திற் படித்தவை :—

உயிர் பன்னிரண்டு; மெய் பதினெட்டு; குறில் ஐந்து; நெடில் ஏழு; சுட்டு மூன்று; வினாவெழுத்து ஐந்து.

பின் வரும் வாக்கியத்தினின்றும் இவற்றை எடுத்தெழுதுக :—

அது தன் கைப்பாசத்தினால் தீயவரைக் கொல்லுமோ?

2. படித்தான், பண்டம், மார்பு—இவற்றிலுள்ள மூவின மெய்களை எடுத்தெழுதுக.

3. அ - உயிர்க்குறில், க - உயிர்மெய்க் குறில்.
ஆ - உயிர் நெடில், கா - உயிர்மெய் நெடில்.
உயிர்மெய்க் குறில் எத்தனை?
உயிர்மெய் நெடில் எத்தனை?

## 2. மெக்ஸிக்கோவின் பழங்குடிகள்

1. மானிடரின் அறிவுவளர்ச்சிக்கேற்ப அவர்தம் குணமும் மாறுதல் அடைகின்றது. பண்டை மானிடர் தம்முள் தலைவரை ஏற்படுத்திக்கொண்டு அவர் கட்டளைக்கடங்கி நடந்து வந்தனர். அத்தலைவர்களே பின்னர் அரசர்களானார்கள். ஆனால், அறிவு முதிரமுதிர அரசர்களுக்கு அடங்கி நடத்தல் தங்களுக்கு இழிவென்றும், தங்களைத் தாங்களே ஆண்டுகொள்வதே சிறப்பென்றும் கருதிச் சில நாட்டினர் அரசர்களைத் துரத்திவிட்டுத் தத்தம் நாடுகளைக் குடியாட்சி நாடுகளாக்கினர். சில நாடுகளில் இக்கொள்கையுடையோர் சிறுபான்மை-




யோராயிருந்ததால், அவர்கள் தம் நாட்டை நீங்கிப் புதிய நாடுகளிற் குடியேறினார்கள். அத்தகையோர் குடியேறிய நாடே புதிய கண்டமாகிய **அமெரிக்கா**வாகும். அங்குக் குடியேறிய பின்னரும் சிலர் தாய்

நாட்டின்மீதுள்ள அபிமானம் குன்ருமல், தம் நாட்டிற்குப் புதிய தேசங்களைத் தம் சுயமுயற்சி-யால் கண்டுபிடித்து அளித்துள்ளனர்.

2. அவர்களில் ஒருவரே **கார்தஸ்** என்னும் ஸ்பெயின் நாட்டினர். அவர் மெக்ஸிக்கோ நகரை அடைந்து, அங்குள்ள மானிடர் நாகரிகத்தில் சிறந்து விளங்குதலையும், அன்னூர் தம்மையொத்த மானிடரையே தம் கடவுளர்க்குப் பலியிடும் வழக்க-முடையவராயிருத்தலையும் கண்டார். அவர் கண்ட நரபலியிடும் மானிடரே மெக்ஸிக்கோவின் பழங்-குடிகளாகிய **அசதக்கர்** ஆவர்.

3. அசதக்கர் செந்நிறம் வாய்ந்தவர்களாயும் உயரமானவர்களாயுமிருந்தனர். அவர்கள் சோம்ப-லின்றிச் சதா உழைப்பவர்களாதலால், திடகாத்-திரத்துடன் விளங்கினுர்கள். அவர்கள் தங்கள் நிலைமைக்கேற்றவாறும், சமயத்துக்கேற்றவாறும் வெவ்வேறுவிதமான உடைகளை அணிந்துவந்தார்-கள்; அவர்களுள் வீரர் பருத்தியினுல் செய்யப்-பட்ட கவசங்களை அணிவர். அக்கவசங்கள் முக்கால் அங்குலம் முதல் ஒன்றரை அங்குலம் வரையிற் கனமுடையனவாயிருக்கும். அவ்வீரர் தம் கால்களையும் அப்பருத்தியினுலாகிய கவசத்-தினுல் பொதிந்துகொள்வர்; அக்கவசங்களின்மீது பறவைகளின் இறகுகளை நெருக்கமாக அமைத்துக்-கொள்வர். அந்த இறகுகளின் நிறங்கள் வீரர்களின் பல பிரிவுகளை உணர்த்தும். வீரர்களிற் சிலர் மிருகங்களின் தோல்களை அணிந்து, அவற்றின்-மீது மிருகங்களின் படங்களைத் தீட்டிக்கொள்வர். உயர்ந்த அந்தஸ்துடைய வீரர் சிலர், பற்பல மிரு-கங்கள், பாம்புகள், பறவைகள் முதலியவற்றின்

வடிவமாகச் செய்யப்பட்டுள்ள தலைச்சீராக்களை அணிந்துகொள்வர். சேனைத் தலைவர் தலைமயிரை மிகக் குட்டையாகக் கத்தரித்துக்கொள்வர். அவர்கள் உதடுகளிலும் மூக்கிலும் வளையங்களை அணிந்து, தலையில் உன்னதமாய் விளங்கும் இறகுகளை அணிந்திருப்பார்கள். அவர்களுடைய சமயாசாரியரின் உடைகள் செந்நிறமுடையனவாகவேயிருக்கும். அவர்கள் உற்சவ நாட்களில் வெவ்வேறுவிதமான வர்ணங்களுடன் தோன்றுவார்கள். ராஜதந்திரிகள், தங்கள் உத்தியோகத்தின் அறிகுறியாகக் கையில் விசிறி ஒன்றை வைத்திருப்பார்கள். யாவரும் கால்களில் பாதரட்சைகளை அணிந்துகொள்ளுவர்.

4. அசதக்கர் தம் வீடுகளைப் பெரிய கழிகளின்மீதே கட்டுவர். ஏழைகளின் வீடுகள் மண்ணாலும், செல்வந்தர்களின் வீடுகள் கற்களாலும் கட்டப்படும். கோயில்கள் பலகையாற் கட்டப்பட்டு, அவற்றின் கூரைகள் ஓலையால் வேயப்பட்டிருக்கும். ஆனால், பலி பீடம் மட்டும் கல்லால் ஆகியதாகவேயிருக்கும். கோயிற்சுவர்கள் பல வித வர்ணங்கள் தீட்டப்பட்டுச் சித்திர வேலைகளுடையனவாய் விளங்கும். 'சுத்தம் சோறிடும்' என்னும் பழமொழியின் உண்மையை அறிந்த அசதக்கர்கள் தங்கள் வீடுகளைச் சுத்தமாக வைத்துக்கொள்வார்கள். கல்வியின் அவசியமும் அவர்களால் நன்கு உணரப்பட்டிருந்தது. சிறுவர் வீட்டில் கல்வி பயின்றபின் பாடசாலைக்கு அனுப்பப்படுவர்; அங்குக் கல்வி பயில்வதுடன் கைத்தொழிற்பயிற்சியும் பெறுவர். பெண்களுக்குத் தனிப்பட்ட பாடசாலைகள் ஏற்பட்டிருந்தன. ஆனால், அவர்-

களுடைய கல்வி கட்டாயக்கல்வியன்று. பெண்களின் கலியாணவயது பதினைன்று. பதினெட்டு வயதிற்குள் விவாகமாகாதவர், சமயப்பள்ளிகளிற் சேர்ந்து சமயக் கல்வி பயின்று, தம் வாணுள் முழுவதும் கோவில்களில் திருப்பணி புரிந்து வருவர்.

5. அசதக்கர்கள் சண்டை செய்வதில் பிரியமுடையவர்கள். விவசாயம் அவர்களுக்கு முக்கியமான தொழிலாயிருந்தது. சாமை போன்ற ஒருவகைத் தானியமே அவர்களது முக்கிய உணவு. அவர்கள் பொன், வெள்ளி முதலிய உலோகங்களால் பாத்திரங்களும் நகைகளும் செய்து வந்தார்கள். அவர்களிடம் சிற்ப சாஸ்திரமும் மேம்பாடடைந்திருந்தது. அவர்கள் பஞ்சினுல் நூல் நூற்று ஆடைகள் நெய்தார்கள். தையற்காரர்களும், குயவர்களும், செம்மார்களும், கூடை முடைகின்றவர்களும் ஏராளமாயிருந்தார்கள். இதனுல் அவர்கள் கைத்தொழிலிற் சிறந்திருந்தார்கள் என்பது தெரிகிறது.

6. அவர்கள் நாடு நான்கு பெரும் பிரேடரிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அப்பிரிவுகளுள் ஒவ்வொன்றும் இருபது பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுக் ' **கின்** ' என வழங்கப்பட்டன. ஒவ்வொரு கின்னிலுமுள்ளவர்கள் தங்களுக்குள் சிலரைத் தேர்ந்தெடுத்து அவர்களை **'மூத்த சகோதரர்கள்'** என வழங்கினுர்கள். அவர்கள் ஒரு தலைவருடன் சேர்ந்து, அந்தந்தக் கின்னினுடைய காரியங்களை நடத்தி வந்தார்கள். ஒவ்வொரு பிரேடரிக்கும் சேனுதிபதி ஒருவன் தலைவனுயிருந்தான். அந்நால்வரும், மூத்த சகோதரர்களிலிருந்து தேர்ந்-

தெடுக்கப்பட்ட ஒவ்வொரு பிரதிநிதியும், இராச்சிய காரியங்களை நடத்துவதற்காகக் கூடும் சபையே '**மகாசபை**' எனப்படும். அந்த மகாசபையார் எண்பது நாட்களுக்கொருமுறை கூடி, இராச்சிய காரியங்களை நடத்துவர். இவ்விதமான ஒழுங்கு அசதக்கர்களின் நாகரிகத்தைக் காட்டப் போதிய சான்ருயமைந்துள்ளது. கொலை செய்தவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப்படும். களவு செய்தவர்களுக்குத் தண்டனையாக அவர்கள் உயிருடன் இருக்கும் போதே தோலை உரித்துவிடுவார்கள். சமய ஒழுங்கை மீறும் சமயாசாரியன் கொல்லப்படுவான். பிறரை நிந்தித்தவர்களுக்கு அவர்களுடைய உதடுகளைத் துண்டித்துவிடுதலே தண்டனையாய் இருந்தது. குலத்தலைவனே சட்டங்கள் ஏற்படுத்துவது வழக்கம். ஒவ்வொரு பிரேடரிக்கும் ஒவ்வொரு நியாயாதிபதியாக நான்கு நியாயாதிபதிகளிருந்தனர். அவர்கள் 'சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபாற் கோடாமை சான்ருேர்க் கணி,' என்பதற்கிலக்காய் நடுவு நிலைமையுடன் நீதி வழங்கிஞர்கள்.

7. இச்சிறப்பியல்புகளுடன் விளங்கிய அசதக்கர்கள் சமயக் கொள்கையொன்றில் மிகவும்பிற்போக்குடையவர்களாய் இருந்தார்கள். அமர்க்கடவுளே அவர்களுக்கு முதன்மைக் கடவுள். அவர்கள் அவ்வமர்க் கடவுளுக்கு எக்காலமும் நரபலியிடுவதாலேயே தங்கட்கு ஆக்கம் பெருகுமென்னும் கொள்கையுடையவர்கள். பொதுவாகச் சண்டையிற் பிடிக்கப்பட்டவர்களையும் குற்றவாளிகளையுமே பலியிட்டு வந்தார்கள். பலியிடவேண்டியவனேடு

அசதக்கர்களில் சிறந்த வீரராயுள்ள ஐவர் சண்டை-செய்வர். அவர்களை அவன் ஜயித்துவிடுவானுனல், அவன் கொல்லப்படாமல், அவனுடைய நாட்டிற்கு அனுப்பப்படுவான் ; தோல்வியுறுவானுனல், அவனைப் பலிபீடத்தின் முன்னுலுள்ள கல்லின்மீது



படுக்கச் செய்வர். சமயாசாரியர்களுள் இருவர் அவன் கால்களைப் பிடித்துக்கொள்வர். ஒருவர் அவன் மார்பைக் கத்தியால் கிழித்து, இருதயத்தை எடுத்து அமர்க்கடவுளுக்குப் பலி செலுத்துவர். அவன் உடம்பைத் துண்டுதுண்டாக வெட்டிச் சமைத்து உண்பர். குற்றவாளிகளும் ஏனையோருமில்லாத சமயத்தில் தங்களுள் ஒருவனையே தேர்ந்து, அவனை நல்லுணவு கொடுத்துக் கொழுக்கச்செய்து பின் பலியிடுவார்கள்.

8. அசதக்கர்கள் நாகரிகம் மிக்கவர்களாய் அரசியல் முறையிலும் நடையுடைபாவனைகளிலும் சிறந்து விளங்கின போதிலும் அவர்கள் மேற்கொண்டிருந்த நரபலியிடும் கொடிய வழக்கம்

அவர்களது நாகரிகத்தைக் கறைப்படுத்தியது. அவர்களது கிராம ஆட்சி முறை பண்டைத்தமிழ-ரின் ஆட்சிமுறையாகவே அமைந்திருந்தது போற்-றத்தக்கது.

### சொற்பொருள் விளக்கம் :

கவசம் - உறை (போர் வீரர் தம்மை எதிரிகளின் வாள் வீச்சினின்றும் காத்துக்கொள்ளுவதற்காக அணிவது), தலைச்சீரா - தலைப்பாகை போன்றது, திருப்பணி - கோவில் வேலை, அமர் - போர், நரபலி - மனிதரைப் பலியிடுதல், கறைப்படுத்தியது - குற்றப்படுத்தியது.

### பயிற்சி :

1. இரு பொருள் எழுதுக :—கண்டம், நிறம், கோல்.

2. வாக்கியங்களில் அமைக்க :—சிறுபான்மையோர், சமயாசாரியர், இலக்கு, கறைப்படுத்தியது.

3. பண்டைத் தமிழருடன் அசதக்கர்களை ஒப்பிட்டுக் கூறுக.

4. சேர்த்தெழுதுக :—சமய + ஆசாரியர் ; கிராம + அதிகாரி ; சேனை + அதிபதி ; சோறு + இடும் ; செம்மை + நிறம்.

### கேள்விகள் :

1. 'அசதக்கர்' என்பவர் யாவர் ?

2. அவர்களுள் வீரர், சமயாசாரியர், கிராமாதிகாரி—இவர்கள் எவ்வெவ்வாறு உடையணிவார்கள் ?

3. அவர்கள் நாகரிகமான அரசியல் முறையையுடைய-வர்கள் என்பது எதனால் விளங்குகின்றது ?

4. அசதக்கர்களின் முதன்மைக்கடவுள் யார் ? அவர்கள் அக்கடவுளை எவ்வாறு வழிபட்டு வந்தார்கள் ?

### கட்டுரைப் பயிற்சி :

'அசதக்கர்களின் நாகரிகம்' என்பதைப்பற்றி ஒரு கட்டுரை வரைக.

## இலக்கணம் :

1. பகுதி : நடக்கிறான், ஓடுகிறான்—இவற்றில் முதலில் நிற்பன நட, ஓடு என்னும் சொற்கள். இவை பகுதியெனப்படும். பகுதி, தொழிலைக் காட்டும்.

கீழ்வரும் சொற்களிலுள்ள பகுதிகளை எழுதுக :—

இருக்கும், கண்டனன், அணிவர், மேற்கொள்வர்.

2. விகுதி : உண்டான், உண்டாள், உண்டனர், ஓடினது, ஓடின.

இவ்வினைமுற்றுக்களில், ஆன், ஆள், அர், து, அ என்பன விகுதிகள்.

உண்டான் - உண் + ட் + ஆன்— ஆன் என்ற விகுதி, ஆண்பாலை உணர்த்துகின்றன.

உண்டாள் - உண் + ட் + ஆள்— ஆள், பெண்பாலை உணர்த்துகின்றது.

உண்டனர் - உண் + ட் + அன் + அர்— அர், பலர் பாலை உணர்த்துகின்றது.

ஓடினது - ஓடு + இன் + அ + து— து, ஒன்றன்பாலை உணர்த்துகின்றது.

ஓடின - ஓடு + இன் + அ— அ, பலவின்பாலை உணர்த்துகின்றது.

சொற்களின் ஈற்றில் நிற்பது விகுதி; அது திணை, பால், எண், இடம் இவற்றையுணர்த்தும்.

உண்டான் - உயர்திணை, ஆண்பால், ஒருமை, படர்க்கையிடம்.

| | |
|---|---|
| உண்டாய் - முன்னிலையிடம், ஒருமை<br>உண்டேன் - தன்மையிடம், ஒருமை | முன்னிலை, தன்மைகளில் விகுதி ஒருமை பன்மை எண்ணை மாத்திரம் உணர்த்தும். |



## 3. போப்பையர்

1. தமிழன்னைக்குச் சிறந்த பணி ஆற்றிய மேனாட்டுப் பெரியார்களுள் **டாக்டர் ஜி. யு. போப்பு** என்பவரும் ஒருவர். சமயத் தொண்டாற்றும் நோக்கத்துடன் இங்கு வந்து தமிழருக்குத் தொண்டு செய்தவர்கள் **வீர மாமுனிவர், போப்பையர், கால்டுவெல் ஐயர்** என்பவர்கள். போப்பையர் வரலாற்றை அறிய வேண்டுவது தமிழ் மக்களின் கடமையாகும்.

2. போப்பையர் அமெரிக்காவின் அண்மையிலுள்ள **பிரின்ஸ் எட்வர்டு** தீவில் 1820-ஆம் ஆண்டு **ஜான் போப்பு, கேத்தரின் யுகுளோ** என்பார்க்குப் புதல்வராய்ப் பிறந்தார். இவரது ஆறும் வயதில் இவர் பெற்றோர் இங்கிலாந்து சென்றனர். இவர் இளமையிலேயே கடவுள் பத்தியிற் சிறந்து விளங்கினர். அதனால், இவர் பெரியவரான போது சமயத்தொண்டு செய்ய

விழைந்தார்; **எபிரேயம், கிரேக்கம்** ஆகிய மொழிகளை நன்கு கற்று, விவிலிய நூற்கருத்துக்களை நன்கு மனத்திற் பதித்துக்கொண்டார். **வெஸ்லியன் சங்கத்தார்** இவரைச் சமயப்பணி ஆற்றும்படி தென்னிந்தியாவுக்கு அனுப்ப எண்ணினர். அதனையறிந்த இவர், சமயத் தொண்டுக்கு உதவுமாறு தென்மொழியையும், வடமொழியையும் நன்கு கற்றுக்கொண்டார்.

3. 1839-ஆம் ஆண்டு போப்பையர் சென்னையை அடைந்தனர்; இங்குச் **சாந்தோம்** என்னுமிடத்தில் இரண்டாண்டுகள் தங்கினர். சமயப்பணி செய்துகொண்டே, **மலையாளம், கன்னடம், தெலுங்கு** முதலிய தென்னாட்டு மொழிகளைப் பயின்று வந்தார். பின்னர், இவர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள **சாயர்புரத்**துக்குச் சமயப்பணியாற்ற அனுப்பப்பட்டார்.

4. சாயர்புரம் அக்காலத்தில் ஒரு குக்கிராமமாயிருந்தது. சில வீடுகளே அங்கிருந்தன. போப்பையர் அங்கு ஒரு பள்ளியை ஏற்படுத்தினார்; ஆசிரியர்கள் வாழ்வதற்கு இல்லங்கள் அமைத்தார்; மாணவர்க்கு உண்டியும் உறையுளும் அளிப்பதற்காக மாணவர் விடுதியையும் உணவுச் சாலையையும் கட்டினார். பல ஊர்களினின்றும் மாணவர் அங்கு வந்து கல்வி பயின்றனர். போப்பையர் தம்மிடம் கல்வி பயில வந்த மாணவர்க்குத் தமிழ், ஆங்கிலம், எபிரேயம், கிரேக்கம், இலத்தீன் ஆகிய பல மொழிகளையும் கற்பித்து வந்தனர். அவர் ஏற்படுத்திய பள்ளியே இன்று உயர்தரப்பள்ளியாய் இருக்கின்றது. போப்பையர் மாணவருக்கு ஒழுக்கம் அவசிய-

மென்பதை வற்புறுத்தி, குற்றம் செய்தவர்களைப் பிரம்பாலும் தண்டித்து வந்தார். போப்பையரின் ஒழுக்கமே பலரைக் கிறிஸ்தவர்களாக்கியது. இவர் ஊர் ஊராகச் சென்று சமயச் சொற்பொழிவுகளாற்றித் தமது இடைவிடாத உழைப்பினுற் பலரைக் கிறிஸ்து மதப் பற்றுடையவராக்கினர். பிறரால் இவருக்குப் பல இன்னல்கள் நேர்ந்தன. இவர் அவற்றைப் பொறுமையுடன் சகித்து வந்தனர். எட்டாண்டுகள் உழைத்த பின் உடல் நலம் குன்றவே, இவர் இங்கிலாந்து சென்று, ஓய்வு பெற்றனர். ஓராண்டு வரையில் அங்குத் தங்கி, மணம் முடித்த பின், தம் மனைவியாருடன் இந்தியாவுக்கு வந்தனர்.

5. சாயர்புரத்தில் கிறிஸ்தவ மதத்தை வேரூன்றச் செய்த போப்பையர், தஞ்சையில் பணியாற்ற விரும்பினர்; அங்குச் சுமார் எட்டாண்டுகள் சமயப்பணி செய்தனர். அங்கு, இவர் தமிழ்ப்புலவர்களை அடுத்துத் தமிழிலக்கியங்களை நன்கு பயின்றார்; **தொல்காப்பியம், நன்னூல்** முதலிய இலக்கண நூல்களைச் சிறுவர் கற்கப் பெரிதும் வருத்தமுறுவதைக் கண்டார்; மாணவர் கற்பதற்கு ஏற்ப **இலக்கண வினாவிடை** நூல்கள் இரண்டு எழுதி வெளியிட்டார்; '**போப்பையர் உரைநடைப் பகுதி**' என்னும் உரைநடை நூலையும் எழுதி வெளியிட்டார்; ஆங்கில முறைப்படி, பல செய்யுட்களைத் தொகுத்துச் **செய்யுட்கலம்பகம்** என்னும் பெயருடன் வெளியிட்டார். தமிழ் நூல்கள் பலவற்றின் சுவையறிய உதவும் இத்தகைய நூல்களை வெளியிட வழி காட்டியவர் போப்பையரேயாவர். இதற்கு முன்னர் இத்தகைய

நூல்கள் தமிழ் நாட்டில் இல்லை. ஆதலின், தமிழ் மக்களுக்குப் பற்பல காலத்தவர் இயற்றிய செய்யுட்களை ஒருங்கே தொகுத்து வழங்கிய பெருமை போப்பையரையே சார்ந்ததாகும்.

6. பின்னர்ப் போப்பையர் **உதகமண்டலம்** சென்றார்; அங்கும் ஒரு பள்ளியை நிறுவினர்; அங்குள்ள பொது நூல் நிலையத்தையும் கண்காணித்து வந்தார். இவர் 1871-ஆம் ஆண்டு **பெங்களூர்** சென்று, **பிஷப்காட்டன் பள்ளி**யின் தலைவராய்த் தொண்டாற்றினர்; 1882-ஆம் ஆண்டு இங்கிலாந்துக்குச் சென்றனர்.

7. தமிழகத்தில் தமிழுக்குத் தொண்டாற்றிய இப்பெரியார் இங்கிலாந்திலும் தமிழ்ப்பணி புரிந்தனர். இவர் அங்கு **ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்**தில் தமிழ்ப் பேராசிரியராய் நியமிக்கப்பட்டார். இப்பணியை இவர் தம் இறுதிக்காலம் வரை மேற்கொண்டிருந்தனர். ஐயரின் பன்மொழிப்புலமையையும் பரந்த அறிவையும் ஆராய்ச்சித் திறனையும் பாராட்டிப் பல்கலைக்கழகத்தார் 1886-ஆம் ஆண்டு இவருக்கு **எம். ஏ.** பட்டம் அளித்தனர்.

8. போப்பையர் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தனர். இதன் முகவுரையில் திருக்குறளையும், தமிழ் மக்களையும் சிறப்பித்து எழுதியுள்ளார். "தாழ்மை, அன்பு, மன்னிப்பு என்பவை கிறிஸ்தவ நற்குணங்கள்; இவை திருக்குறளிற் காணப்படுகின்றன; உயர்ந்த நீதியைக் கடைப்பிடித்தொழுகும் சிறந்த மக்கள் வாழும் நாட்டிலேதான் திருக்குறள் போன்ற ஒழுக்கநூல் எழுதப்படமுடியும்; தமிழ் மக்கள் ஒழுக்கமுள்ளவர்கள்,"

என்று அதில் குறிப்பிட்டிருக்கின்றார். தமிழ் மக்கள்பால் இவருக்கிருந்த அன்பும் மதிப்பும் இவற்றால் தெரியவருகின்றன. **நாலடியாரையும்** இவர் மொழி பெயர்த்து, வெளியிட்டனர். **திரு-வாசகமும்** இவரால் மொழி பெயர்க்கப்பட்டது. இவ்வாறு, இவர் ஆங்கிலேயரும் தமிழினிமையை நுகரும்படியாகச் சிறந்த தமிழ் நூல்களை ஆங்கி-லத்தில் மொழி பெயர்த்து வெளியிட்டதுடன் சில கட்டுரைகளும் எழுதி வந்தனர்.

9. பிற மொழியினராயினும், தமிழ் மொழிப் பற்றுடையவராய், தமது முதுமைக் காலத்திலும் தமிழ்மொழியிலுள்ள நூல்களைப் பெரிதும் விரும்-பிக் கற்றுத் தமிழன்னையின் புதல்வராய் விளங்கிய போப்பையர் 1908-ஆம் ஆண்டு இறைவன் திருவடி நீழலை எய்தினர்.

**சொற்பொருள் விளக்கம் :**

பணி - தொண்டு, குக்கிராமம் - சிறிய கிராமம், இல்லம் - வீடு, உறையுள் - இருப்பிடம், வேரூன்றச்செய்தல் - நிலைபெறச் செய்தல், தொல்காப்பியம் - தமிழிலுள்ள பழைய இலக்கண நூல், கண்காணித்து - மேற்பார்வையிட்டு, நாலடியார் - 400 வெண்பாக்கள் கொண்ட சிறந்த நீதி நூல், திருவாசகம் - மாணிக்கவாசகர் என்ற சைவ சமயப்பெரியார் எழுதிய நூல், பற்று - அன்பு, இறைவன் திருவடி நீழல் எய்துதல் - இறத்தல், சாயர்புரம் - சாமுவேல் சாயர் என்னும் வணிகர் வாங்கிக்கொடுத்த இடம்.

**பயிற்சி :**

1. **எதிர்ச்சொற்கள் எழுதுக :**—தென்மொழி, மேனாடு, ஒழுக்கம், சிறப்பித்தல்.

2. **வாக்கியங்களில் அமைக்க :**—வேரூன்ற, தமிழ்ப் பணி, தொகுத்து, கண்காணித்து, குக்கிராமம்.

**கேள்விகள் :**

1. போப்பையர் எங்குப் பிறந்தார்?
2. இவர் இளமையில் கற்றன யாவை?

3. சாயர்புரத்தில் இவர் செய்த தொண்டு யாது?

4. இவர் தமிழ் நாட்டில் சமயப்பணி புரிந்த ஊர்கள் எவை?

5. இங்கிலாந்தில் இவர் செய்த தமிழ்ப்பணி யாது?

6. இவர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தெழுதிய தமிழ் நூல்கள் எவை?

7. தமிழ் மக்களைப் பற்றி இவர் கூறியுள்ளது யாது?

**இலக்கணம் :**

1. பகுதி விகுதி கூறுக:—தொண்டாற்றினர், கற்ருர், சென்ருர், எய்தினர்.

2. வாங்கு, வழங்கு, காண், கேள்—இப்பகுதிகளினின்றும் தன்மை, முன்னிலை, படர்க்கை வினைமுற்றுக்களுக்கு ஒவ்வோர் உதாரணம் எழுதுக.

**இடைநிலைகள் :**

உண்டான்—உண் + ட் + ஆன்

உண்கிருன்—உண் + கிறு + ஆன்

உண்பான்—உண் + ப் + ஆன்

இவ்வினைமுற்றுக்கள் வெவ்வேறு காலங்களையுணர்த்து-கின்றன. காலத்தை உணர்த்தும் உறுப்பு எது?

பகுதியும் விகுதியும் ஒன்றுபோலிருக்கின்றன; ஆனல், இடையிலுள்ள உறுப்புத்தான் வேறுபடுகின்றது. அதனல், காலமும் வேறுபடுகின்றது. இடைநிலை வேறுபடும்போது கால-மும் வேறுபடும். ஆதலின், வினைச்சொல்லில் இடைநிலையே காலம் காட்டும் என்பதை அறியவேண்டும்.

உண்டான்—தொழில் இறந்த காலத்தில் நடைபெற்றதைத் தெரிவிக்கின்றது. இடைநிலை—ட்.

உண்கிருன்—தொழில் நிகழ்காலத்தில் நடைபெறுவதைத் தெரிவிக்கிறது. இடைநிலை—கிறு.

உண்பான்—தொழில் எதிர்காலத்தில் நடைபெறப்போவ-தைத் தெரிவிக்கிறது—இடைநிலை—ப்.

காலம் மூன்று. அவை, **இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம்** என்பன.

இறந்தகால இடைநிலைகள்—த், ட், ற், இன்.

நிகழ்கால இடைநிலைகள்—கிறு, கின்று, ஆநின்று.

எதிர்கால இடைநிலைகள்—ப், வ்.

கல், செல், படி—இவற்றிலிருந்து முக்கால வினைமுற்றுக்கள் எழுதுக.



## 4. இந்தியத் தொழிலரசர்

1. ஒரு நாடு பிற நாடுகளிற் சிறந்து விளங்க, அந்நாடு கல்வி, விவசாயம், கைத்தொழில்களிற் சிறந்து விளங்க வேண்டும். பண்டைக்காலத்தில் கைத்தொழிலிற் சிறப்புற்று விளங்கிய நம் நாடு, இக்காலை அச்சிறப்பிழந்து, வறிய நிலை அடைந்துள்ளது. மக்கள் பெரும்பாலும் உழவுத் தொழிலையே புரிந்துவருகின்ருர்கள். பண்டைய முறைப்படி செய்யப்படும் உழுதொழில் போதிய பலனை அளிக்காமையின், நாம் உணவுப் பொருள்களுக்கும் பிற நாடுகளையே எதிர்பார்க்கும் நிலையேற்பட்டுள்ளது. மேனுடுகளில் கைத்தொழிற்சிறப்பால், உழவும் புதிய முறையில் இயந்திரச் சாதனங்களால் நடத்தப்பட்டு, நற்பயன் உதவுகின்றது. ஆதலின், கைத்தொழிலறிவே உழவுத்தொழிலுக்கும் ஆதாரம் என்பது தெரியவரும். உழவுத்தொழிலால் உணவுப்பொருள்களைப் பேரளவில் உற்பத்தி செய்தும்,

கைத்தொழில் அறிவால் கைத்தொழிற்பொருள்களையாக்கியும் மேனுட்டார் உயர்வுபெற்று விளங்குதலைக் கண்டு, நம் இந்திய நாடும் கைத்தொழில் நாடாகவேண்டுமென்னும் விருப்பால் தொழில்வளர்ச்சிக்கு அடி கோலினவர் ஜாம்ஷெட்ஜி **நஸ்ஸர்வான்ஜி டாட்டா** என்ற பெரியாராவர்.

2. இப்பெரியார் **பரோடா** நாட்டில் **நவ்ஸாரி** என்னும் ஊரில் 1839-ஆம் ஆண்டு பிறந்தார். பாரசீகப்புரோகிதர் குடும்பத்தில் தோன்றிய இவர் தந்தையார், தம் குலத்தொழிலை விட்டு, இவரது பதின்மூன்ரும் வயதில் பம்பாய் சென்று வாணிகஞ் செய்யத் தொடங்கினர். அவர் இந்தியாவிலும், பிற நாடுகளிலும் நிதி நிலையம் ஏற்படுத்தியிருந்தார். ஜாம்ஷெட்ஜி கல்லூரியிற்பயின்று பட்டம் பெற்ற பின், தம் தந்தையாருக்கு உதவியாகச் சீனுவிலும் பம்பாயிலும் வணிகத் துறையில் உழைத்து வந்தார். இவர் சீனுவில் வேலை பார்த்த சமயம், அமெரிக்காவில் உள் நாட்டுப் போர் நிகழ்ந்தது. அதனுல், அங்குப் பருத்தி விளைவு குறைந்தது. இவர் இந்தியப் பருத்தியின் விலையை உயர்த்திப் பெரும்பொருள் ஈட்டினர். இவர் தந்தையார் இலண்டனில் கிளை நிலையம் ஒன்றை நிறுவி, இவரை அங்கு அனுப்பினர். இவர் 1864-ஆம் ஆண்டில் அங்குச் சென்று, இயந்திரத்தால் நூல் நூற்கும் தொழிலை நன்கு கற்றுக்கொண்டார்; பருத்தி வாணிகத்தின் நுட்பங்களையும் பருத்தியாலைகளின் அமைப்பையும் நன்குணர்ந்து, இந்தியாவிலும் அத்தகைய ஆலைகளை நிறுவ எண்ணங்கொண்டார்.

3. இவர் இந்தியாவுக்குத் திரும்பியதும், ஓர்

எண்ணெய் ஆலையை வாங்கி, அதனை நூல் நூற்கும் ஆலையாக மாற்றினர். சிறிது காலங்கழித்து அதனைத் தாம் வாங்கிய விலையைக்காட்டிலும் பன்மடங்கு அதிகமான விலைக்கு விற்றுவிட்டார்; மீண்டும் இங்கிலாந்து சென்று, இயந்திரங்களின் அமைப்புடன், தட்பவெப்ப நிலையும் ஏற்றபடி நூல் நூற்புக்கும் நெசவுக்கும் அமையவேண்டும் என்ற உண்மையை அறிந்தார். 'இந்தியா விவசாயத்திற்கே உரியது; கைத்தொழிலுக்கு உரியதன்று,' என்பது அக்காலத்தவர் துணிபு. ஆனல், டாட்டா இந்தியாவும் கைத்தொழில் நாடாய் விளங்குதல் கூடும் என்பதை உலகத்திற்கு எடுத்துக்காட்ட விரும்பினர்.

4. இவர் 1874-ஆம் ஆண்டு **நாகபுரியில் சக்கரவர்த்தினி ஆலை** என்ற பெயருடன் பஞ்சாலையொன்றை நிறுவினர். **விக்டோரியா மகாராணி** முடி சூட்டிய அன்று அவ்வாலை திறக்கப்பட்டதால், அதற்கு அப்பெயரிடப்பட்டது. டாட்டா அவ்வாலையின் கிளையொன்றைப் பம்பாயில் நிறுவி, அதைத் தாமே மேற்பார்வை புரிந்து வந்தனர்; ஆமதாபாதிலும் ஓர் ஆலையை வாங்கிப் பின் அதனை விற்றுவிட்டார்; தம் ஆலைகளில் வேலை செய்பவர்களை மிகவும் பேணி வந்தார்; அவர்களுக்குக் குடியிருக்க வீடுகளும், அவர்கள் குழந்தைகள் கல்வி கற்பதற்குக் கல்வி நிலையங்களும், மருத்துவ இல்லங்களும் அமைத்தார்; தொழிலாளர்களுக்கு வேண்டிய வசதிகள் யாவும் செய்தளித்தார். இதனல், அவர்கள் ஊக்கமாகவும் உண்மையாகவும் உழைத்து வந்தார்கள்; தொழிலும் வளர்ச்சியுற்றது.

5. அக்காலத்தில் கப்பற்கட்டணம் பெருஞ்-சுமையாய் இருந்தது. டாட்டா தம் ஆலைகளில் நூற்ற நூலைப் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வந்தார். இவர் கப்பற்கட்டணம் மிகுதியாயிருத்-தலைக் கண்டு, தாமே சொந்தத்தில் மூன்று கப்பல்-களை வாங்கினர். ஆங்கிலேயர்களுக்கே உரிமையா-யிருந்த கப்பற்றெழிலை இந்தியர் ஒருவர் நடத்து-தலைக் கண்ட ஆங்கிலக் கப்பற்குழுவினர், இவருக்கு இடையூறு பல விளைத்தனர். இதனுல், இத்துறையில் இவர் வெற்றி பெற முடியவில்லை.

6. டாட்டா பருத்தித் தொழிலை வளர்த்த-துடன், பட்டுத்தொழிலையும் வளர்க்க முயன்ருர்; மைசூரே பட்டுப்பூச்சிகள் வாழ்வதற்கு ஆதார-மான முசுக்கட்டைச் செடிகள் வளர்வதற்கேற்ற இடமென்பதை அறிந்தார்; அங்குப் பட்டுப்பூச்சி வளர்க்கும் பண்ணையொன்றை ஏற்படுத்தினுர்; முசுக்கட்டைச்செடிகளைப் பயிர் செய்தார்; பட்டு நூல் நூற்கும் முறைகளைக் கையாண்டு, சிறந்த நூலை எடுத்துப் பட்டாடைகள் நெய்து, வெளிநாடு-களுக்கு அனுப்பினுர். பிற நாட்டவரும் அப்பட்-டின் மேன்மையைப் புகழ்ந்தனர்.

7. பட்டுத் தொழிலும், பருத்தித் தொழிலும் வளர்ச்சியடைய உழைத்துவந்த டாட்டா, இரும்புத் தொழிலையும் வளர்க்க விரும்பினுர். பண்டைய இந்திய இரும்பின் மேன்மையைக் கேள்விப்பட்ட இவர், இரும்பு எங்குக்கிடைக்குமென ஆராய்ந்-தார்; **பீகார்** மாகாணத்தில் **சாகச்சி** என்னும் கிராமத்தைத் தேர்ந்தெடுத்தார். அதனருகே இரும்பு, நிலக்கரி, சுண்ணும்பு ஆகியவை வேண்டு-மளவு கிடைக்குமென்பதை அறிந்தார். இவர்

மைந்தரான **தோராப்ஜி** என்பவர் இத்தொழிலின் பொறுப்பை மேற்கொண்டார். இரும்புத்தொழிற்-சாலை, இரும்பு எஃகுத் தொழிற்சாலையாய் மாறிற்று. காடாய் இருந்த இடம் அழகிய உழைப்-பாளிகள் நிறைந்த இடமாய் விளங்குகின்றது.



அறுபது மைல் நீளத்துக்கு இருப்புப் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. இஃது டாட்டாவின் பெயரால் **ஜாம்ஷெட்பூர்** என வழங்கப்பெறுகிறது. உலகப்போர் நடைபெற்றசமயம் இரும்பு கிடைப்-பது அரிதாயிருந்தது. அதனுல், டாட்டா இரும்புத்-தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட இரும்-பும்பொருள்கள் அதிக விலைக்கு விற்கப்பட்டன. தண்டவாளங்கள், தூண்கள், உத்தரங்கள், தகடு-கள், உருளைகள் முதலியன அங்குச் செய்யப்படு-

கின்றன. பல்லாயிர மக்கள் அங்கு வேலே செய்கின்ருர்கள். இந்தியர்கள் இயந்திரத் தொழிலில் தேர்ச்சி பெற்றுள்ளார்கள். அங்குத் தொழிற்கல்விச்சாலேயும் ஏற்பட்டுள்ளது. நூற்றுக்கணக்கான மாணவர் பொறிக்கலே பயின்று வருகின்றனர்.

8. இந்திய நாட்டுக் கைத்தொழில் வளத்துக்கு வழி வகுத்த டாட்டா, ஓயா உழைப்பினுல் உடல் நிலே தளர்ந்தார்; உடல் நலம் குன்றவே ஓய்வு பெற்று, வியன்ன சென்ருர்; அங்கு நோய் அதிகரித்ததால், 1904-ஆம் ஆண்டு காலமானுர். டாட்டாவின் நற்பண்புகளேயும், நாட்டிற்கு இவர் செய்த பணியையும் என்றும் மறவாது போற்ற இவர் பெயரால் பம்பாய் நகரில் உருவச்சிலேயொன்று அமைத்துள்ளனர். இவர் பெயர் விளங்க இவர் ஆரம்பித்த டாட்டா இரும்புத் தொழிற்சாலே இந்தியாவில் பெருந்தொழிற்சாலேயாய்த் திகழ்கின்றது. பெங்களூரில் விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகம் இவர் திட்டப்படி 1911-ஆம் ஆண்டு தொடங்கப்பெற்று, உலக விஞ்ஞான நிபுணர் **ஸர். சி. வி. ராமன்** தலேமையில் பௌதிகம், இரசாயனம், மின்சாரம் இவற்றைப்பற்றிய ஆராய்ச்சி நிகழ்த்தி வருகின்றது. கூரிய மதியும், பொதுநல நோக்கும், வாணிகத்திறமையும், வினேத்திட்பமும் ஒருங்கே வாய்ந்த டாட்டா இந்தியர் யாவராலும் போற்றுதற்குரியவர்.

**சொற்பொருள் விளக்கம் :**

துணிபு - முடிவான கொள்கை, கட்டணம் - கூலி, குழுவினர் - கூட்டத்தார், ஓயா - இடைவிடாத, நோக்கு - நோக்கம், வினேத்திட்பம் - மேற்கொண்ட தொழிலே நடத்தும் மனவுறுதி.

### பயிற்சி :

1. எதிர்ச்சொற்கள் எழுதுக :—வெப்பம், உழைப்பு, வளர்ச்சி, பொதுநலம்.

2. பிரித்தெழுதுக :—கப்பற்ருெழில், மேனுடு, சிலையொன்று, பட்டாடை.

3. பொரி, பொறி; பொருப்பு, பொறுப்பு; பற்று, பட்டு—இவற்றின் பொருள் வேறுபாட்டை விளக்குக.

### கேள்விகள் :

1. டாட்டா வணிகத்துறையில் எவ்வாறு பொருள் ஈட்டினர்?

2. இவர் இங்கிலாந்தில் நெய்தற்ருெழில் சம்பந்தமாக அறிந்தன யாவை?

3. இவர் நிறுவிய பஞ்சாலைகள் யாவை?

4. இவர் வளர்ச்சியடையச் செய்த தொழில்கள் யாவை?

5. டாட்டா இரும்புத்தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படுவன யாவை?

6. டாட்டாவின் சிறந்த குணங்கள் யாவை?

### கட்டுரைப் பயிற்சி :

'டாட்டாவின் வாழ்க்கை முயற்சி' என்பது பற்றி ஒரு கட்டுரை வரைக.

### இலக்கணம் :

செய்தான் - செய் + த் + ஆன் - த் இறந்தகால இடைநிலை.
உண்டான் - உண் + ட் + ஆன் - ட் ,, ,,
சென்ருன் - செல் + ற் + ஆன் - ற் ,, ,,
ஓடினன் - ஓடு + இன் + ஆன் - இன் ,, ,,
ஓடுகிருன் - ஓடு + கிறு + ஆன்-கிறு
ஓடுகின்ருன்-ஓடு + கின்று + ஆன்-கின்று
ஓடாநின்ருன்-ஓடு + ஆநின்று + ஆன்-ஆநின்று } நிகழ்கால இடைநிலை
உண்பான் - உண் + ப் + ஆன் - ப் எதிர்கால இடைநிலை.
செல்வான் - செல் + வ் + ஆன் - வ் ,, ,,

முக்கால இடைநிலைகளை உபயோகித்து வகைக்கோர் உதாரணம் எழுதுக.

# 5. கலிங்கப் போர்

1. தமிழ் நாட்டில் அரசு செலுத்திய மூவேந்தரும் இணையற்ற வீரராய் விளங்கியிருந்தனர். **பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்,** ஆரியவரசர்களை வெற்றி கண்டவன் என்பதும், **இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்,** இமயம் வரை சென்று, இமயத்தில் தன் விற்பொறித்தவன் என்பதும் அவர்தம் பெயர்களால் தெரியவரும். சோழப் பேரரசர்களும் வீரப் பெருமக்களாய் விளங்கினர்களென்பது வரலாற்றுப் புகழ் பெற்ற **இராசேந்திர சோழனது** வெற்றிகளால் அறியப்படுகின்றது. அவன் பெயரனுன **முதற்குலோத்துங்கனும்** சிறந்த வீரன். அவன் கலிங்க நாட்டரசன் **அனந்தபதும சோடகங்கன்** என்பவனைப் போரில் வென்ருன். அப்போரைச் சிறப்பித்து, **சயங்கொண்டார்** என்ற புலவர் **கலிங்கத்துப்பரணி** என்னும் நூலைப் பாடியுள்ளார். இந்நூலினின்றும் சோழ அரசர் பரம்பரை, குலோத்துங்கனுடைய முன்னேர் வீரச் செயல்கள், அரசியல், மக்கள் நாகரிகம் முதலியவற்றை அறியலாம். சிறப்பாகப் போர்க்களநிகழ்ச்சிகள் படிப்பவர் அகக்கண் முன் அப்படியே தோன்றும். அப்போரிற் குலோத்துங்கன் அடைந்த வெற்றியே அவனுக்குப் பெரும்புகழை அளித்தது.

2. குலோத்துங்கன் ஒருசமயம் தன் நாட்டின் வடபகுதியிலுள்ள காஞ்சி மாநகரில் தங்கியிருந்தான். அரசன் தன் அரண்மனை மண்டபத்தில் அமைச்சரும், சேனைத்தலைவரும் தன்னைச் சூழ்ந்திருக்க அமர்ந்திருந்தான். சிற்றரசர் பலர் அவ-

னுக்கு இறுக்க வேண்டிய திறைப் பொருளைக் கொணர்ந்து அவனை வணங்கிச் சென்றனர். அப்பொழுது மன்னன், "நமக்கு இன்னும் திறை செலுத்த வேண்டுபவர் உளரோ?" என்று வினவினன். அங்கிருந்த கணக்கன் அரசனை வணங்கி, "அரசரே, யாவரும் தாம் செலுத்த வேண்டிய திறைப்பொருளைச் செலுத்திவிட்டனர்; ஆனால், வட கலிங்கத்தரசன் மட்டும் இரண்டு முறை கப்பம் செலுத்தவில்லை," என்றனன். இதனைக் கேட்ட அரசன் வெகுண்டு, தன் சேனைத்தலைவனை நோக்கி, "கலிங்க மன்னன் தன் மலையரண் வன்மை உடையதெனத் தருக்கியிருக்கின்றான் போலும்! கடிதிற்சென்று அவனைச் சிறை செய்து வருக!" எனக் கட்டளையிட்டனன்.

3. தானைத்தலைவனான **கருணாகரத் தொண்டைமான்** எழுந்து, "மன்னர் மன்னரே, உமது கட்டளைப்படியே அக்கலிங்கனது வலியழித்து, அவனைக் கட்டிக் கொணர்வேன்!" எனக் கூறிப் பெரும்படையுடன் யானையின்மீதமர்ந்து சென்றான். நால்வகைப் படைகளும் அவனைத் தொடர்ந்தன. மலைகள் பெயர்ந்து சென்றாற்போன்று யானைகள் திரள் திரளாகச் சென்றன. குதிரைகள் காற்றிலும் கடுகிச் சென்றன. மேகக் கூட்டம் எனும்படி தேர்கள் அணி அணியாய்ச் சென்றன. காலாட்படைகள் கடல் போலத் திரண்டெழுந்தன. சங்குகள் முழங்கின. முரசுகள் அதிர்ந்தன. பாலாற்றையும் பெண்ணையாற்றையும் கடந்து, கிருஷ்ணா, கோதாவிரி நதிகளைத் தாண்டிக் கருணாகரன் தன் படைகளுடன் கலிங்கநாட்டினுள் புகுந்தான். பல ஊர்கள் தீக்கிரையாயின; சில

ஊர்கள் சூறையாடப்பட்டன. தங்கள் வீடு வாயில்களையும், பொருளையும் இழந்த மக்கள் கண்ணீரும் கம்பலையுமாய் அரசனிடம் சென்று முறையிட்டார்கள்.

4. குடிகளின் துன்பநிலையைக் கண்ட சோடகங்கன் கொதித்தெழுந்தான்; "சோழன் என் வலி அறியான் போலும்! எனது நாடு சிறந்த அரண்கள் அமைந்துள்ளது என்பதை மறந்தனனோ? என் நாட்டிற்புகுந்து என்னை எதிர்க்கத் துணிந்தனனே! சிங்கத்தை அதன் குகையில் எதிர்க்க முடியுமோ? அரசனின்றி வந்த இத்தொண்டைமான் மீண்டு செல்வானோ? அவன் அறியாமை இருந்தவாறு என்னே!" எனக் கூறிச் சிரித்தான்.

5. அவன் அருகில் இருந்த **எங்கராயன்** என்ற அமைச்சன் அரசனைப் பணிந்து, "அரசரே, கோபம் கொள்ளற்க. சோழனது படை, வீரம் மிக்கது; பாண்டியர் ஐவரும் அவருடைய படைகளும் காற்றின்முன் எதிர்த்த பஞ்சு போல மாய்ந்தொழிந்ததை நீவிர் அறியவில்லையா? இச்சேனையால் தம் வலியிழந்த மன்னர் எத்துணை பேர்! கடல் போன்ற அப்படை முன் நம் படை எம்மாத்திரம்? நான் இவ்வாறு கூறுவது பொய்யன்று என்பதை அதனை எதிர்ப்பின் நீவிர் அறிவீர். ஆதலின், எண்ணித் துணிக!" என்று உண்மை நிலையை உணர்த்தினன். இதனைக் கேட்டும், அரசன் கோபம் தணியவில்லை.

6. அரசன் ஆணைப்படி, கலிங்கப் படைகள் அணி வகுத்துச் சென்றன. இரு திறப் படைகளும் ஒன்றையொன்று எதிர்த்தன. கருணாகரத் தொண்-

டைமான் புலியெனப் பாய்ந்து போரிடத் தொடங்கினன். அவன் வாள் வீச்சுக்கு இலக்காகி இறந்தவர் எண்ணிலார். அவன் வீரங் கண்டு அச்சத்தால், தம் ஆருயிர் துறந்தனர் பலர். அவன் படை வீரர் கலிங்கர்களை நாற்புறமும் வளைத்து அழிக்கலாயினர்; அம்பு மழை பொழிந்தனர். அம்பு மழைக்காற்ருது அருந்துயர் உழந்தனர் அனந்தபதுமன் படை வீரர். குருதி வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. வெண்குடைகள் அவ்வெள்ளத்தில் மிதந்தன. காலொடிந்தவரும், கையிழந்தவரும், அவ்விடத்தில் உயிரிழந்தவரும் பலராவர்.



7. கலிங்கரின் யானைகள் சோழ வீரரின் கணை பட்டுக் காலிழந்தும், வாலிழந்தும், சிரம் சிதைந்தும், நாநா பக்கமும் சிதறின. பல, குருதி வெள்ளத்தில் புரண்டன. குதிரைகளும் கால்-

களும் தலைகளும் துண்டிக்கப்பட்டுக் கீழே விழுந்து துடித்தன. போர் வீரர் போர் செய்யும் திறனின்றித் துணிவின்றித் தம் படைக்கலங்களைப் போகட்டுப் புறங்காட்டியோடினர். எஞ்சி நின்ற யானைகளும், குதிரைகளும், தேர்களும் கருணா-கரன் படைகள் வசமாயின. சோடகங்கன் தன் படைகள் தோற்றோடியதைக் கண்டு, தன் உயிர் தப்பச் சிலருடன் தப்பியோடி மலைக்குகையில் ஒளிந்துகொண்டான். கலிங்கநாடு கருணாகரன் வசமாயிற்று.

8. சோழவீரர் சோடகங்கனை நாடு முழுவதும் தேடி, மலையுச்சியில் மறைந்திருந்த அவனை மறு-நாள் கைப்பற்றினர். கருணாகரத்தொண்டைமான் வெற்றியுடன் நாடு திரும்பினன்; தான் கொணர்ந்த நவமணிகளையும், பொற்குவியல்களையும் அரசன் முன் வைத்து, அடி பணிந்து நின்றான். அவனால் கொண்டுவரப்பட்ட கலிங்க மன்னனையும், அவ-னிடமிருந்து கைப்பற்றிய ஆயிரக்கணக்கான கரிகளையும், பரிகளையும், நிதிக்குவியல்களையும் கண்ட குலோத்துங்கன், பெரிதும் மகிழ்ந்தான்; தானைத்தலைவனைப் பலவாறு பாராட்டி, அவனுக்-குப் பரிசுகளும் பட்டங்களும் வழங்கினான்; படை வீரர்க்கும் அவரவர் தகுதிக்கேற்பப் பரிசுகள் வழங்கினான். சோடகங்கனுக்கு அறிவுரை கூறித் தனக்கு அடங்கி வாழுமாறு செய்து கலிங்க நாட்-டிற்கனுப்பினன்.

**சொற்பொருள் விளக்கம் :**

கடந்த - வெற்றி பெற்ற, குலோத்துங்கன் - இராசேந்திர **சோழன்** மகள் குந்தவையின் மகன், கோதாவிரி கிருஷ்ணை யாறுகளிடையேயுள்ள கீழைச் சாளுக்கிய நாட்டரசன் மகன்;

பரணி - போரில் வெற்றி பெற்ற ஆயிரம் யானையைக் கொன்ற வீரனைப் பற்றிப் பாடும் ஒரு பிரபந்தம், திறை - கப்பம், கருணாகரன் - வண்டைநகர் அரசன், வலி - வலிமை, கணை - அம்பு, போகட்டு - போட்டுவிட்டு.

### பயிற்சி :

1. அணி அணியாக, திரள் திரளாக, காற்றினும் கடுகி, இலக்காகி, புறங்காட்டி—இவற்றை வாக்கியங்களில் அமைத்தெழுதுக.

2. திரை, திறை ; தலை, தளை ; புகல், புகழ்—இச்சொற்களின் பொருள் வேறுபாட்டை எழுதுக.

### கேள்விகள் :

1. கலிங்கத்துப்பரணி யாரால் பாடப்பட்டது ?
2. அதினின்றும் அறியத் தக்கவை யாவை ?
3. குலோத்துங்கன் கலிங்க நாட்டின்மீது படையெடுக்கக் காரணம் என்ன ?
4. சோட கங்கனுக்கு அறிவுரை கூறியவன் யாவன் ? அவன் கூறிய அறிவுரை யாது ?
5. படைகள் புறப்பட்டுச் சென்றது எவ்வாறிருந்தது ?
6. போர்க்கள நிகழ்ச்சி எவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது?
7. வெற்றி பெற்றவருக்கு அரசன் செய்த சிறப்பு யாது ?

### கட்டுரைப் பயிற்சி :

கலிங்கப்போர் நடை பெறுவதற்குரிய காரணம், போர் நிகழ்ச்சி, முடிவு இவற்றைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

### இலக்கணம் :

**செந்தமிழ் கொடுந்தமிழ் :**

**சோறு** :—இது தூய தமிழ்ச் சொல் ; இதனைத் தமிழர் அனைவரும் அறிவர்.

**சொன்றி**—இது சோற்றைக் குறிக்கும். தமிழர் அனைவரும் அறியார் ; இது கொடுந்தமிழ்ச் சொல்.

பிறமொழிக்கலப்பின்றி இலக்கணவரம்புக்கு உட்பட்டு வழங்கும் சொல் செந்தமிழ்ச் சொல்லாகும்.

பிறமொழிச்சொற்களாய்த் தமிழ் நாட்டில் வழங்குவனவும், பலவாறு திரிந்து வழங்குவனவும் கொடுந்தமிழ்ச் சொல்லாம். திசைச்சொற்களும் கொடுந்தமிழ்ச்சொற்களேயாம்.

| செந்தமிழ்ச் சொல் | கொடுந்தமிழ்ச் சொல் |
|---|---|
| தாய் | தள்ளை |
| தந்தை | அச்சன் |
| கிழவன் | கிழம் |
| கிழவி | கிழடு |
| சிறுமி | சிறுக்கி |

பாயுது, அவங்க, கொடக்கூலி, ஆச்சு, மச்சான்—இவற்றுக்கேற்ற செந்தமிழ்ச் சொற்களை எழுதுக.

# 6. பண்டைத் தமிழர் பண்பாடு

1. பண்டைத் தமிழ் மக்கள், 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்,' என்ற உயர்ந்த பண்பாடு உடையவர்கள்; 'மருந்தேயாயினும் விருந்தோடு உண்,' என்ற பாத்துண்ணும் பண்பு வாய்ந்தவர்கள்; பிறர்மாட்டு வெறுப்பும் செல்வத்தின்மாட்டு விருப்புமற்றவர்கள்; பழிச்சொல்லுக்கு அஞ்சியவர்கள்; மானத்தையே உயிரெனக்கொண்டு, புகழ் ஈட்டுதலையே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டவர்கள்; பெருஞ்செல்வம் எய்தியவிடத்து மகிழ்தலும், வறுமையுற்றக்கால் வருந்துதலும் இல்லாதவர்கள்; வறுமையிற் செம்மைக்குணம் அமைந்தவர்கள்; பிறர் துன்பம் நீக்கி வாழும் பெருமைக்குணம் பெற்று விளங்கியவர்கள்; 'செல்வத்தின் பயன் ஈதலே,' என்ற நோக்குடன் வறியார்க்கும் பிறர்க்கும் வழங்கி வாழும் இயல்புடையவர்கள்; படை வீரம் பிறழாப் பண்புடையவர்கள்.

2. அறவழிச் செல்லுதலே ஆருயிர்க்கு உற்ற துணை என அறிந்து, தமிழர் ஒழுகி வந்தனர்; 'நீவிர் நல்லன செய்யீராயினும் அல்லன செய்யாது வாழ்மின்; அதுவே எல்லோராலும் விரும்புதற்குரியது; அன்றியும், நல்வழியிற் செலுத்தும் நெறியும் அதுவேயாகும்,' என்ற அறிவுரை வழிச்சென்றவர்;

'புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
அறங்கூறும் ஆக்கந் தரும்.'

என்ற உண்மை அறிந்து புறங்கூறுதலை ஒழிந்த வாழ்க்கையினர்; இடித்துக்கூறி நல்வழிப்படுத்து-

தலையன்றிப் பின்னின்று இழித்துரைத்தலைப் பேணுதவர்.

3. இத்தகைய வாழ்க்கைப்பண்புடன் ஒழுகிய தமிழர், போரினும் அறப்போர் முறைகளைக் கையாண்டனர். பகைவர் நாட்டுடன் பொரக்கருதிய அரசன், தூதுவர் மூலம், "பகைவர்காள், பசுக்களையும், அந்தணரையும், பெண்களையும், பிணியாளர்களையும், மகப்பெருதவர்களையும், காவலமைந்த இடங்களுக்குக் கொண்டு செல்லுங்கள். யாம் எம் அம்புகளை விடப் போகின்ருேம்," எனக் கூறச்செய்வன்; போர்க்களத்திலும் ஆயுதமில்லாதவனேடும், இளைஞனேடும், முதியவனேடும், ஒத்த ஆயுதமில்லாதவனேடும், கோழை மனத்தினனேடும் சண்டை செய்யான். ஒரு தமிழ் வீரன், "இரண்டு கைகளையுடைய யான் ஒரு கையுடைய யானையுடன் பொருதல் குற்றமுடைத்து; அதுவுமன்றி, விலங்குடன் பொருதலும் இழிவுடைத்து," எனக் கூறிப் போரொழிந்தனன். பிறரால் அம்பெய்யப் பெற்றுத் துன்புற்ருேரையும் தமிழ் வீரர் அடுவாரல்லர். இவ்வாறு தமிழகத்தில் மறம் நிகழ்ந்தவிடத்தும் அறமே நிகழ்ந்தது.

4. தமிழர் பற்பல தொழில் செய்யுந்திறன் வாய்க்கப்பெற்றிருந்தனர். முற்காலப்பெண்டிர் அருமையான ஆடைகள் நெய்தற்குரிய நுண்ணிய இழைகளைப் பஞ்சினின்றும் நூற்று வந்தனர். பாலாடை போன்ற மெல்லிய நூலாடைகளும், பல நிறப்பட்டாடைகளும், பொன்னிழையாடைகளும் தமிழ் மக்களால் நெய்யப்பட்டன. பட்டு, கம்பளி, பருத்தி இவற்றைச் சேர்த்துப் பல நுண்ணிய தொழில்களைச் செய்யும் நெய்வோர் இருக்கைகள்

புகார் நகரில் இருந்தனவெனச் **சிலப்பதிகாரம்** என்னும் நூல் கூறும். மரம், இரும்பு, வெண்கலம், வெள்ளி, பொன் முதலியவற்ருல் நுட்பம் வாய்ந்த தொழில் புரியும் கம்மியரும் பிற தொழிலாளரும் முற்காலத்து இருந்தனர்.

5. இசையிலும் நாடகத்திலும் தமிழர் சிறந்தவர். தமிழ் நாட்டில் ஆடல் பாடலிற்றேர்ந்த பாணர்களேயும், கூத்தர்களேயும் தமிழ் மக்கள் போற்றி வந்தார்கள். **பெருநாரை, பெருங்குருகு** முதலிய இசை நூல்கள் இருந்தன. தமிழுக்கே உரிய ஏழிசைகள் **குரல், துத்தம், கைக்கிளே, உழை, இளி, விளரி, தாரம்** என்பன. தமிழர் இறைவனேயே இசை வடிவாகக் கொண்டனர். பல வகை இசைக்கருவிகளும் கையாளப்பட்டன. அவற்றைத் **தோற்கருவி, துளேக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி** எனப் பகுத்திருந்தனர். திருவிழாக்காலங்களில் ஆடல் பாடல்களிரண்டையும் சேர நிகழ்த்துவதிலிருந்து நாடகம் எழுந்தது. கதை நடையான மனப்பாடங்கள் பின்னர்ச் சேர்க்கப்பட்டன. இவ்வாறு வளர்ந்த நாடகத் தமிழ் உயர்நிலே பெற்று விளங்கியது. அக்காலத்தெழுந்த நாடகநூல்கள் பல. சிலப்பதிகாரமும் நாடகக்காப்பியமென்றே வழங்கப்படும்.

6. ஓவியக் கலேயிலும் தமிழர் சிறப்புற்றிருந்தனர். பழைய கோயில்களும், **அமராவதி, மாமல்லபுரம்** முதலிய இடங்களிலுள்ள சிற்ப நுட்பங்களும் தமிழரின் சிற்பக்கலேக்குச் சான்று பகர்கின்றன. கட்டடக்கலேயிலும் தமிழர் தேர்ந்திருந்தனர் என்பது பழைய நூல்களால் தெரிய வருகின்றது.

'சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதொறும்
மையறு படிவத்து வானவர் முனிவர்
எவ்வகை உயிர்களும் உமங் காட்டி
வெண்சுதை விளக்கத்து வித்தக ரியற்றிய
கண்கவர் ஓவியம்.'

என்ற மணிமேகலை நூலின் அடிகளிலிருந்து தமிழ் மக்கள் கட்டடங்கள் கட்டி, ஓவிய சிற்பங்களுயர்வு பெறச்செய்தமை அறியக்கிடக்கின்றது. மனிதர்கள், மிருகங்கள், கடவுளர் முதலியோர் வடிவங்கள் பல நிற மைகளினால் வீடுகள், அரண்மனைகள், கோயில்கள் முதலியவற்றின் சுவர்களில் தீட்டப்பட்டிருந்தன. கல், உலோகங்கள், செங்கல், மரம், மண், சுண்ணம், தந்தம், வண்ணம், மெழுகு முதலியன சிற்பவேலைக்குதவுவன என நூல்கள் கூறுகின்றன. இதனால் தமிழ் மக்களின் சிற்பத்திறன் தெரியவரும்.

7. சிற்பவேலைகள் அக்காலத்தமிழரின் உயர்ந்த நடையுடை பாவனைகளை விளக்கும் கருவியாயுள்ளன. அவற்றைக்கொண்டு தமிழர் மிக்க நாகரிகமுடையவரென்பதை அறியலாம். மருத்துவக்கலையும், சோதிடக்கலையும் சிறப்புற்றிருந்தன. அக்காலத்தமிழரது ஆட்சிமுறை இக்கால மக்களும் வியக்கத்தக்க நிலையிலிருந்தது. நாட்டைப் பல சிறு பகுதிகளாகப் பிரித்துத் தலைவர்களை ஏற்படுத்தியிருந்தனர். கிராமங்களிலுள்ள மக்கள் தேர்தல் முறையால் கிராமப்பஞ்சாயத்து உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தனர். அவ்வுறுப்பினருள் ஒருவர் தலைவராக நியமிக்கப்பட்டனர். கிராமங்களில் உண்டாகும் வழக்குகள் பொது மன்றங்களில் தீர்க்கப்பட்டு வந்தன. ஊர்ப்பொதுநன்மைகள்

யாவும் அவர்களால் கவனிக்கப்பட்டு வந்தன. கிராம ஆட்சி குடியாட்சியாகவே இருந்தது. நாட்டில் நடக்க வேண்டிய பெருங்காரியங்களை நாட்டுத் தலைவர்கள் கவனித்து வந்தார்கள். அவர்களுக்கு மேல் அரசன் நாடு முழுவதிலும் ஆட்சியைச் செலுத்தி வந்தான். இதே முறையைத்தான் **பஞ்சாயத்து முறை** என்று வழங்குகின்றனர். நம் அரசியலார் இக்கிராம ஆட்சியையே புதுப்பிக்கச் சட்டமேற்படுத்திக் கிராமந்தோறும் ஊராண்மைக்கழகங்களை ஏற்படுத்தி வருகின்றனர். இம்முறையினுல், ஏழைக் குடியானவர்களும் பாமர மக்களும் நியாயமன்றங்களுக்குச் சென்று பணத்தை வீணே செலவிடாது, சமாதான முறையில் தங்களுக்குள் எழும் சச்சரவுகளையும் வழக்குகளையும் தீர்த்துக்கொள்ளுதல் கூடும்; ஒற்றுமையுடன் பணியாற்றவும் வசதி ஏற்படும்.

8. பிறப்பினுல் கொள்ளும் உயர்வு தாழ்வு பண்டைத்தமிழகத்தில் இருந்ததில்லை. ஒவ்வொருவரும் தத்தம் பிழைப்புத் தொழிலாக ஒவ்வொரு தொழிலை மேற்கொண்டிருந்தனர். தொழில்கள் குலாசாரத் தொழிலாயிருந்தன. இவையே பின்னர்ச் சாதிபாகுபாட்டுக்குக் காரணமாயின. சாதிப் பெயர் அவரவர் மேற்கொண்டிருந்த தொழிலைப்பற்றியதாகவே காணப்படுகிறது.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்; சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.'

என்ற குறட்கருத்திற்கேற்பவே தமிழ் மக்கள் ஒழுகினுர்கள்.

9. ஆண் பாலாரும் பெண் பாலாரும் ஒத்த கல்வியுடையவராயிருந்தனர். இருபாலாரும் ஒழுக்-

கத்திற் சிறந்திருந்தனர். தமிழரின் உயர்பண்புகளைச் சங்க நூல்களும் பிறவும் தெள்ளிதின் விளக்குகின்றன. இப்பண்பு இற்றை நாளில் தமிழ் மக்களிடையே காணப்படுமாயின், தமிழ் நாடு சிறுப்புறும் என்பதில் ஐயமுண்டோ?

### சொற்பொருள் விளக்கம்:

கேளிர் - உறவினர், மருந்து - தேவாமிர்தம், பாத்து - பகிர்ந்து, பிறழா - தவருத, அல்லன - தீயன, பொய்த்து - பொய் யான வாழ்க்கை நடத்தி, இடித்துக்கூறி - கண்டித்துரைத்து, அடுவாரல்லர் - கொல்லுவாரல்லர், இழை - நூல், மையறு - குற்ற மற்ற, சுதை - சுண்ணும்பு, பாகுபாடு - பிரிவு, ஒத்த - சமமான, மிடறு - கழுத்து.

### பயிற்சி:

1. எதிர்ச்சொற்கள் எழுதுக:—நல்லன, பொய், கோழை, நுண்ணிய.

2. ஆடல்பாடல், சிற்பநுட்பம், கண்கவர் வனப்பு, பாகுபாடு—இவற்றை வாக்கியங்களில் அமைக்க.

3. செய் (வயல்), கேணி (சிறுகுளம்), ஆய் (தாய்), வெள்ளம் (தண்ணீர்)—இவை என்ன சொற்கள்?

### கேள்விகள்:

1. பண்டைத் தமிழரின் உயர்ந்த பண்பு யாது?
2. அவர்கள் எப்படிப்பட்ட அறிவுரை வழிச்சென்ருர்கள்?
3. பண்டைத் தமிழர் மேற்கொண்ட போர் முறை யாது?
4. தமிழர் எவருடன் போர் செய்யார்?
5. முற்காலத்தமிழர் தொழிலைப்பற்றிக் கூறப்படுவது யாது?
6. அரசியல் முறையைப் பற்றி நீ அறிவது என்ன?
7. 'பிறப்பினுல் உயர்வு தாழ்வு இல்லை' என்பதை யார் கூறியுள்ளார்?
8. தமிழ் நாட்டுக் கல்வி எவ்வாறிருந்தது?

### கட்டுரைப் பயிற்சி:

'தமிழர் பண்பு' என்பதைப்பற்றி ஒரு கட்டுரை வரைக.

## இலக்கணம் :

### மரபு :

ஒரே தொழில் செய்யும் பலரை நாம் வெவ்வேறு பெயரால் வழங்குகிறோம்.

ஆடு மேய்ப்பவன் - **இடையன்.**

யானையைப் பாதுகாப்பவன் - **பாகன்.**

இவை தொன்றுதொட்டு வழங்குவன. இவற்றை யானை இடையன், ஆட்டுப்பாகன் என்று வழங்குதல் கூடாது. முன்னோர்கள் வழங்கிய முறையில் சொற்களை வழங்குவதே **மரபு**; மாறி வழங்குவது **மரபு வழு.** குதிரைக் கன்று, பசுக்குட்டி— இவை மரபு வழு. (வழு - குற்றம்) குதிரைக் குட்டி, பசுவின் கன்று—இவை மரபு. திணை, பால், இடம், காலம் மாறி வழங்குவன திணை வழு, பால் வழு, இட வழு, கால வழு.

அவன் ஓடினது - திணை வழு - உயர்திணை எழுவாய் அஃறிணை முடிபேற்றது.

அவன் ஓடினள் - பால்வழு - ஆண்பால் பெயர் பெண்பால் முடிபேற்றது.

யான் வந்தான் - இடவழு - தன்மைப் பெயர் படர்க்கை முடிபேற்றது.

நாளை வந்தான் - காலவழு - எதிர்காலம் இறந்த காலமாயிற்று.

உறங்குகிற மகன் ஆணோ? பெண்ணோ? - வினவழு - மகன் எனத் துணிந்து கூறிப் பின் ஆணோ பெண்ணோ என்பது வழு.

நீ எப்போது வந்தாய் என்ற வினவிற்கு 'அவன் வரவில்லை' என்பது—விடைவழு—வினா ஒன்றைக் குறிக்க, விடை வேறாக வருவது.

சொற்கள் ஒன்றையொன்று தொடரும்பொழுது திணை, பால், இடம், காலம் முதலியவற்றில் பிறழாது நிற்பது, வழாநிலை. அவை ஒன்றுக்கொன்று மாறுபட்டிருப்பது வழு.

பேசும்பொழுதும், எழுதும் பொழுதும் வழு நீக்கிப் பேசவும் எழுதவும் வேண்டும்.



## 7. ராஜா ரவிவர்மா

1. மக்கள் மனப்பண்பை வளர்த்து மகிழ்ச்சி-யூட்டும் கலைகளை அறுபத்துநான்கு என்பர். அவற்-றுள், **இசை, ஓவியம், சிற்பம், கவிதை** என்பன அழகியற்கலைகளாம். இசை, கவிதை என்பன செவிக்கின்பம் பயப்பன. ஓவியமும் சிற்பமும் கட்-புலனால் அறிந்து இன்புறத்தக்கன. கலைஞன் கலையை ஆக்குகின்றான்; ஏனையோர் அதனை நுகர்ந்து இன்பம் எய்துகின்றனர். பாமரரும் இன்பமடைவதற்குரியது ஓவியக்கலையேயாகும். ஓவியம் காகிதத்திலாயினும், துணியிலாயினும், சுவரிலாயினும் எழுதப்படுமிடத்து அதனைக் காண்-பவர் எழுதப்பட்டுள்ள உருவத்தையும் இயற்கைக் காட்சிகளையும் தம் கட்புலனால் நுகர்ந்து, தம் துன்பநிலையை மறந்து, மகிழ்ச்சியில் திளைக்-கின்றனர். இதுவே ஓவியத்தின் சிறப்பாகும்.

2. நம் முன்னோர் ஓவியக்கலையிற் சிறந்து

விளங்கினர். பண்டைய இந்திய நாட்டு ஓவியச் சிறப்பை **அஜந்தாக் குகை** ஓவியங்களே சிறப்பாக எடுத்துக்காட்டுகின்றன. இத்தகைய ஓவியங்களைத் தீட்டும் ஓவியக்கலை விற்பன்னர் பலர் நம் நாட்டில் வாழ்ந்தனர். அவர்களுள் அண்மையில் விளங்கியவர் **ராஜா ரவிவர்மா** என்பவர் ஆவர்.

3. ராஜா ரவிவர்மா, திருவாங்கூர் நாட்டிலுள்ள **கிள்ளிமனூர்** என்ற இடத்தில் கி. பி. 1848ல் பிறந்தார். இவர் தந்தையார் **ராஜா வர்மா** என்னும் அரச குடும்பத்தைச் சார்ந்தவர். ராஜா வர்மா சிறந்த சைத்திரிகர். ரவிவர்மாவின் அம்மானுரான **ராஜ ராஜ வர்மா** என்பவர் சித்திரக்கலை நுட்பங்களை இவருக்குக் கற்பித்தனர். இளமையிலேயே எதனையும் உற்று நோக்குமியல்பும், கற்பனு சத்தியும் இவரிடம் அமைந்திருந்தன. ஆதலின், இவர் எளிதில் ஓவியக்கலையிற் கைதேர்ந்தவராயினர். திருவாங்கூர் நாட்டில் அக்காலத்தில் வாழ்ந்த **தியோடர் பென்ஸன்** என்ற ஆங்கிலேய ஓவியப் புலவர், ரவிவர்மாவுக்கு ஆசிரியராயினர். அவரிடமிருந்து ரவிவர்மா மேனுட்டு வர்ணந்தீட்டும் முறையைக் கற்றறிந்தனர்.

4. ரவிவர்மாவுக்கு இருபத்தைந்தாம் வயதில் திருமணம் நடந்தது. இவர் தம் அரண்மனையிலேயே ஓர் அறையில் சித்திரமெழுதுங்கூடம் அமைத்துக்கொண்டார். 1873-ஆம் ஆண்டில் சென்னையில் நடைபெற்ற கலைப்பொருட்காட்சியில் இவரெழுதிய படத்திற்கே கவர்னரின் தங்கப் பதக்கம் பரிசாக வழங்கப்பட்டது. **வியன்னு** நகர்ப் பொருட்காட்சிச் சாலைக்கு அனுப்பப்பட்ட

இவரது படத்துக்குச் சிறந்த பரிசு அளிக்கப்பட்டது.

5. ரவிவர்மா புராணப்படங்கள் தீட்டுவதில் இணையற்று விளங்கினர். இராமாயண மகாபாரதக் கதை நிகழ்ச்சிகளை இவருடைய சித்திரங்கள் நன்முறையில் விளக்குகின்றன. இவர் பழமையிற் புதுமையைக் காணச் செய்தனர். சகுந்தலை நாடகம், நளசரிதம் இவற்றிற் குறிப்பிட்ட நிகழ்ச்சிகளை மிகத் திறம்பட இவர் சித்திரமாகத் தீட்டியுள்ளனர். மைசூர் மன்னருக்குச் சுமார் பதினான்கு படங்கள் வரைந்து ஈந்தனர். **உதயபுரி, பரோடா** அரசர்களும், திவான்களும், ஆங்கிலேயர்களும் இவரது திறமையைப் பாராட்டியுள்ளனர். இவ்வாறு தென்னாட்டில் சித்திரக் கலைக்குப் புத்துயிர் கொடுத்துப் புகழ் சூடிய இவர், 1906-ஆம் ஆண்டு இவ்வுலகை விட்டு நீங்கினர். காலஞ்சென்ற தேசியக் கவிஞர் **சுப்பிரமணிய பாரதியார்** இவர் ஓவியத்திறனை உலகிற்கு எடுத்துரைத்தனர்.

**சொற்பொருள் விளக்கம் :**

விற்பன்னர் - நிபுணர், கட்புலன் - கண்ணறிவு, நுகர்ந்து - அனுபவித்து, திளைக்கின்றனர் - மூழ்குகின்றனர்.

**பயிற்சி :**

1. செவிக்கின்பம், கட்புலன், கலை நுட்பம், தீட்டுதல்— இவற்றை வாக்கியங்களில் அமைக்க.

2. இருபத்தைந்து, பொருட்காட்சி, இவ்வாறு—இவற்றைப் பிரித்தெழுதுக.

**கேள்விகள் :**

1. அழகியற்கலைகள் என எவற்றைக் குறிப்பர் ?
2. தென்னாட்டுச் சித்திரக்கலை நிபுணர் யாவர் ?

3. அவர் ஓவியக்கலையை யாரிடம் பயின்ருர் ?
4. அவரது திறமை உலகிற்கு எவ்வாறு தெரிய வந்தது ?
5. அவரது திறனை உலகிற்கு அறிவித்தவர் யாவர் ?

### கட்டுரைப் பயிற்சி :

'தென்னாட்டு ஓவியக்கலை' என்பது பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

### இலக்கணம் :

#### வழுவமைதி :

கடவுள் இருக்கின்ருர் - கடவுள் முக்காலத்திலும் இருக்கின்றவர் - இவ்வாறு முக்காலத்துக்கும் பொதுவானதை நிகழ்காலத்தில் கூறுவது **கால வழுவமைதி.** இலக்கண வழுவாயுள்ளன சில, வழக்கத்தில் வந்து ஒப்புக்கொள்ளப் பட்டுள்ளன. அவை வழுவமைதி எனப்படும்.

ஒரு பசுவை 'என் அம்மை வந்தாள்' என்பது திணைவழுவமைதி.

ஒரு பெண்ணை 'என் அப்பன்' என்பது பால் வழுவமைதி.

இராமன் தாய் இதைச் செய்வேனே ?—(இராமன் தாயாகிய) யான் என்னும் தன்மைப் பெயர் இருக்கவேண்டும் இடத்தில் தாய் என்னும் படர்க்கைப் பெயர் வந்திருத்தல் இடவழுவமைதி.

கறியும் சோறும் உண்டான்—மரபு வழுவமைதி (சோறு உண்டான் ; கறி தின்ருன் என்றிருத்தல் மரபு.)

வழுக்களைத் திருத்தியெழுதுக :—

1. அவன் நேற்று ஓடுவான்.
2. ஆட்டுப்பாகன் யானையின்மீது அமர்ந்தான்.
3. அந்நாய் பெரியவன்.
4. நான் இப்பாடல் பாடினேன்.

சில வழூஉச்சொற்களும் திருத்தங்களும் : இவற்றை நன்கு மனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் :

| பிழை | திருத்தம் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| குதவளை | குரல்வளை | வாய்வு | வாயு |
| சிரங்கை | சேரங்கை | வேணும் | வேண்டும் |
| திகட்டு | தெவிட்டு | கேழ்வி | கேள்வி |

# 8. மாணவரும் கைத்தொழிற் பயிற்சியும்

1. மக்கள் பிறந்தது முதல் படிப்படியாக அறிவில் வளருகின்றனர்; தம்மைச் சுற்றிலுமுள்ள பொருள்களைக் கண்டும், அவற்றைப்பற்றிக் கேட்டும், அவற்றைத்தொட்டும், சிலவற்றை உண்டும், மோந்தும் பொருள்களைப்பற்றிய அறிவைப் பெறுகின்றனர். குழந்தைகள் பதார்த்தங்களைச் சுவைத்து அவற்றின் சுவையாகிய தன்மையை அறிகின்றன; மலர்களை மோந்து மணமுடைய மலர், மணமில்லா மலர் என வேறுபாடு உணர்கின்றன; மிருதுவான பொருளையும், கடினமான பொருளையும் தொட்டுணர்கின்றன; இனிய பாடல்களைக் கேட்டு இன்புறுகின்றன. அழுஞ்சமயத்தும் இசை அவைகளை இன்பத்திலாழ்த்துவது கண் கூடு; மாம்பழம் புளிப்பானது, இனிப்புள்ளது என்பதைப் பிறர் சொல்லாமல், தாமாகவே சுவைத்து அறிந்துகொள்ளுகின்றன. அழகிய மலர்களும், படங்களும் குழந்தைகளால் விரும்பப்படுகின்றன. குழந்தைகளின் செயலை உற்று நோக்குபவர் அறிவு ஐம்பொறிகள் வாயிலாகவே வளர்கின்றது என்பதை ஐயமின்றி அறிந்துகொள்ளுதல் கூடும். இவ்வுண்மையை மனத்திற்கொண்டே அறிஞர்கள் அறிவை வளர்க்கும் கல்வி ஐம்பொறிகள் வாயிலாகவே புகட்டப்படவேண்டும் என்ற முடிவிற்கு வந்துள்ளார்கள்.

2. ஐம்பொறிகள் வாயிலாகக் கல்விகற்றற்குச் செயன்முறைக் கல்விமுறையே பெரிதும்கையாளப்படுகின்றது. மாணவ மாணவிகள் தாங்களே ஒரு

தொழிலைச் செய்தும், பொருள்களை ஆக்கியும் அறிவு பெறுவார்களாயின், அவ்வறிவு என்றும் நீங்காது அவர்கள் மனத்தில் நிலைபெறும். இதுவே இயற்கைக் கல்வியாகும். இக்கல்வியே நமது பண்டைத்தமிழ் நாட்டில் விளங்கியது. சங்கப்-புலவர் பலர் தம் பிழைப்புத் தொழிலாக மேற்-கொண்டிருந்த தொழில்களை அவர்கள் பெயரைக்-கொண்டே அறியலாம். **மருத்துவன் தாமோதர-ஞர், கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனர்** என்-பவர் மருத்துவத்தொழிலும், வணிகத்தொழிலும் புரிந்து வந்தனரென்பது விளங்கும். இடைக்-காலத்தில் ஏட்டுக்கல்வியே கல்வியென்ற தவருன கருத்து மக்களிடையே நிலவியதால், தொழிற்கல்வி குன்றியது; நாடும் தன் கைத்தொழில் வளனை இழந்தது. உரிமை பெற்ற பின்னர், நாடு கைத்-தொழிலிற் சிறந்து விளங்கவேண்டுமென்னும் நோக்கத்தால், மாணவர்களுக்குக் கைத்தொழிற்-பயிற்சி அளிக்கப்பட வேண்டுமென்ற கல்வித் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. நூல் நூற்றல், ஆடை நெய்தல், தச்சு வேலை, உழுதொழில் முதலி-யன மாணவரின் தகுதிக்கேற்பப் பெரும்பாலான பள்ளிகளில் கற்பிக்கப்படுகின்றன. இம்முறை முன்னரே நடைமுறையில் கொணரப்பட்டிருக்கு-மாயின், தமிழ் நாடு கைத்தொழிலில் இன்றைய தாழ்நிலையை அடைந்திராது. தமிழர் தாம் செல்-லும் பிற நாடுகளிலும் கைத்தொழிற்கல்வியைப் பெரிதும் போற்றி வந்துள்ளனர் என்பதற்குச் **சிங்கப்பூர் இராமகிருட்டிண மட ஏழை மாண-வர் விடுதியே** போதிய சான்ருகும்.

3. இராமகிருட்டிண ஏழை மாணவர் விடுதி

சிங்கப்பூரின் நகராண்மைக்கழக ஆதிக்கத்துக்குட்பட்ட இடத்தே அமைந்துள்ளது. அது ஜனநெருக்கமுள்ள நகர்ப்பகுதியினின்றும் சுமார் மூன்று கல் தொலைவிலுள்ள தனித்த ஓர் இடத்திலுள்ளது. அங்குப் பெற்றோரை இழந்தும், அவர்களால் கைவிடப்பட்டும் ஆதரவற்ற நிலையிலுள்ள மாணவர் வதிகின்றனர். ஏறக்குறைய எழுபது மாணவர் உள்ளனர். அருள்மனம் வாய்ந்த மடத்தலைவர்களின் ஆதரவில் அம்மாணவர் கல்வியும் கைத்தொழிலும் பயின்று வருகின்றனர். ஆங்கிலப்புலமையையே விழையும் மக்கள் வாழும் அந்நகரில், தமிழ் வளர்க்கும் நிலையமாய் விளங்குவது இராமகிருட்டிணத் தமிழ்ப்பாடசாலையேயாகும். அப்பள்ளியில் முதல் வகுப்புத் தொடங்கி எட்டாம்வகுப்பு வரையில் உள்ளன. மாணவர்க்குத் தமிழ், கணக்கு, வரலாறு, விஞ்ஞானம் முதலிய பாடங்கள் தமிழ் மொழியிலேயே கற்பிக்கப்படுகின்றன. வகுப்புகள் காலை ஏழு மணிக்கு ஆரம்பமாகும். காலை வணக்கத்தின் பின்னர் உடற்பயிற்சி வகுப்பு நடைபெறும். பின்னரே, பிற பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. நண்பகல் பன்னிரண்டு மணிக்கு மாணவர் தம் விடுதிக்குச் செல்வர். அவ்விடுதி பள்ளியிலிருந்து மூன்றரைக் கல் தொலைவிலிருப்பதால் விடுதிக்குரிய மோட்டார் வண்டியிலேயே அம்மாணவர் பள்ளி சென்று திரும்புகின்றனர்.

4. பள்ளி சென்று திரும்பிய மாணவர்க்கு நண்பகல் உணவு அளிக்கப்படுகின்றது. அதன் பின்னர் அவர்களுக்குக் கைத்தொழிற்பயிற்சி அளிக்கப்படுகின்றது. மாணவர் தம் விருப்பத்துக்கிணங்கப் பல்வேறு தொழில்களைப் பயின்று வரு-

கின்றனர். கைத்தொழிற்சாலைக்கென்றே ஒரு பெரிய கட்டடம் பற்பல சாதனங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. நூல் நூற்றலும், நெய்தற்றொழில் புரிதலும் ஒருசார் நடைபெறுகின்றன. சிங்கப்பூரில் வாழும் தமிழ் மக்களும் பிறரும் நன்கொடையாக அளித்துள்ள பொருளுதவியால் பல தறிகள் வாங்கப்பட்டுள்ளன. அவற்றால் மிக மெல்லிய துணிகள் நெய்யப்படுகின்றன. சித்திர வேலைப்பாடுள்ள போர்வைகள், விரிப்புகள் முதலியன



மாணவரால் நெய்யப்படுகின்றன. மாணவர் நன்முறையில் நெய்தற்றொழில் பயின்று வருகின்றனர். கட்டடத்தின் மற்றொரு பக்கத்தில் தச்சு வேலை நடைபெறுகின்றது. தச்சுத் தொழில் செய்ய விழையும் மாணவர் பயிற்சி பெற்ற ஆசிரியரின்கீழ் அத்தொழிலைப் பயின்று வருகின்றனர். மேசை, நாற்காலி, மரப்பெட்டிகள் முதலியன அவர்களால்

செய்யப்படுகின்றன. மரத்தை இழைத்துச் சிறிய உருவங்கள் செய்யும் திறனும் சில மாணவரிடம் காணப்படுகின்றது.

88928

5. தையல் வேலையும் திறம்படக் கற்பிக்கப்படுகின்றது. அவ்விடுதியில் பயிற்சி பெற்ற மாணவர் ஒருவரே தையல் தொழில் கற்பிக்கும் ஆசிரியராய் விளங்குகின்றார். அவர் அரசாங்கத்தாரால் நடத்தப்பெறும் கலாசாலையில் போதனுமுறைப்பயிற்சி பெற்று, அரசாங்க ஊதியம் பெற்று, அங்கு ஆசிரியராய்ப் பணியாற்றுகின்றார். அத்தொழிலை மாணவர் எளிதிற் கற்றுக்கொள்ளுகின்றனர். மாணவரே தமக்கு வேண்டிய காற்சட்டை, மேற்சட்டை முதலியவற்றைத் தைத்துக்கொள்ளுகின்றனர். எட்டாவது வகுப்புத் தேர்வில் தேறிய மாணவர், அத்தொழிலை நன்கு கற்று, மாதம் நூற்றைம்பது ரூபா முதல் இருநூறு ரூபா வரை சம்பாதிக்கும் திறன் பெறுகின்றனர். பொத்தான்களைத் தைப்பதற்குத் தனிப்பட்ட கருவியையும், துணிகளைத் தேய்ப்பதற்கு மின்சாரக் கருவியையும் அங்கு உபயோகிக்கின்றனர்.

TB
031(8)
N58

6. காகிதத்தால் மலர்களும், சாடிகளும், பெட்டிகளும் செய்வதற்குரிய பயிற்சியும் மாணவர்க்கு அளிக்கப்படுகின்றது. களி மண்ணுல் விலங்குகளும், பறவைகளும், கட்டடங்களும் உருவாக்கப்படுகின்றன. ஒழிந்த நேரங்களில் மாணவர் பிரிவு பிரிவாகச் சென்று, தோட்ட வேலை செய்வர். நிலத்தைப் பண்படுத்தவும், விதை விதைக்கவும், பயிருக்கேற்ற உரமிடவும் மாணவர் அறிவுறுத்தப்படுகின்றனர். நீர் பாய்ச்ச வேண்டிய பயிர்கள் ஒரு சிலவேயுள. பெரும்பாலும் இயற்கை

யன்னையே பயிர்களுக்கு நீர் உதவுகின்றுள். நம் நாட்டில் பாசனத்திட்டங்கள் அரசாங்கத்தாரால் வகுக்கப்பட்டுள்ளன. அந்நாட்டிற்கு இத்தகைய திட்டங்கள் வேண்டா. குடிநீர்த்தேக்கம் நன்-



முறையிலமைந்து, மக்களுக்குப் பயன்படுகின்றது. பயிர்கள் நீரின்றியே வளர்ந்து பயனுதவுகின்றன. ஆதலின், மாணவர் தோட்ட வேலையை மிக்க விருப்புடன் செய்து வருகின்றனர்.

7. இளமையிலேயே கைத்தொழிற்பயிற்சி பெறும் மாணவர் பள்ளியினின்றும் நீங்குங்கால் பிழைப்புத்தொழிலின்றி அல்லலுறமாட்டார்; தாம் கற்ற கைத்தொழிலறிவால் மிக எளிதாகப் பொருள் ஈட்டுவர். பிறதொழில்கள் கிடைக்கப்பெருதபோது மாணவர் சமையற்ருெழில் புரிகின்றனர். மாணவர் விடுதியில் மாணவரே சமையற்ருெழில் செய்ய வேண்டியவராகின்றனர். சிற்றுண்டிச்சாலைகளிற் பரிசாரகர்களாகவும், தையற்காரர்களாகவும் பணி-

யாற்றிச் சில மாணவர் பொருள் சம்பாதித்து வருகின்றனர். ஏட்டுக்கல்வியும், தொழிற்கல்வியும் ஒருங்கே பயிற்றப்படுமாயின், தாம் கற்ற தொழி-லால் அடையும் பொருளேக்கொண்டு இளேஞர் எதிர்காலத்தில் பொருள் முட்டுப்பாடின்றித் தம் வாழ்நாட்களே இனிது கழிக்க முடியும். உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனே செய்து வாழ்தலே தக்கது.

**சொற்பொருள் விளக்கம் :**

ஐம்பொறிகள் - மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன; செயன்முறைக்கல்வி - தொழிலேச் செய்து அது வாயிலாக அறிவை அடைதல், வதிகின்றனர் - வாழ்கின்றனர், தேக்கம் - தேக்கிவைத்தல், அல்லல் - துன்பம், முட்டுப்பாடு - குறைவு.

**பயிற்சி :**

1. இசை, ஐயம், குன்று, நூல், மடம்—இவற்றிற்கு இரு பொருள் கூறுக.

2. பண்படுத்தல், தனிப்பட்ட, திறம்பட, போற்றி வந்தனர்—இவற்றை வாக்கியங்களில் அமைக்க.

**கேள்விகள் :**

1. மக்கள் எவை வாயிலாக அறிவை அடைகின்ருர்கள்?
2. ‘இயற்கைக் கல்வி’ என்பது யாது?
3. சங்கப்புலவர் தொழிற்கல்வியும் கற்றிருந்தனர் என்பது எவ்வாறு தெரிய வரும்?
4. இடைக்காலத்தில் மக்களிடையே நிலவிய தவருன கருத்து யாது?
5. இப்பொழுது கல்வித்திட்டம் எந்த நோக்கத்துடன் வகுக்கப்பட்டுள்ளது?
6. இராமகிருட்டிண மடத்து மாணவர் ஏட்டுக் கல்வியை எப்பொழுது கற்கின்றனர்?
7. அவர்கள் கற்கும் தொழில்கள் யாவை?
8. அவர்கள் எளிதில் கற்று வரும் தொழில் யாது?
9. அவர்கள் பிற்காலத்தைப்பற்றிக் கவலேயுருதது ஏன்?

**கட்டுரைப் பயிற்சி :**

'இராமகிருட்டிணமடத்து மாணவரும் தொழிற்கல்வியும்' என்பது பற்றி ஒரு கட்டுரை வரைக.

**இலக்கணம் :**

**வேற்றுமை :**

'மாடு' என்னும் பெயர்ச்சொல், 'மாடு மேய்ந்தது', என அது செய்யுந்தொழிலுடன் சேர்த்துக்கூறப்படுங்கால், மேய்தலாகிய தொழிலைச்செய்யும் கருத்தாவாய்ப் பொருளில் வேறுபடுகின்றது. இவ்வாறு, பொருள் கர்த்தாப்பொருளாக மாறுவது முதலாம் வேற்றுமை.

இராமன் வந்தான்—முதலாம் வேற்றுமை.

தச்சன் பெட்டியைச் செய்தான்—பெட்டியை—ஐ உருபு சேர்ந்து பெயர்ப்பொருளைச் செயப்படுபொருளாக மாற்றியது—இரண்டாம் வேற்றுமை.

உளியால் இழைத்தான்—உளியால்—ஆல் உருபு சேர்ந்து பெயர்ப்பொருளைக் கருவிப் பொருளாக மாற்றியது—மூன்றும் வேற்றுமை.

ஏழைக்குக் கொடுத்தான்—ஏழைக்கு—கு உருபு சேர்ந்து பெயர்ப்பொருளைக் கொடைப் பொருளாக மாற்றியது—நான்காம் வேற்றுமை.

முதல் நான்கு வேற்றுமைகளுக்கு இப்பாடத்தின் ஏழாம் பத்தியிலிருந்து உதாரணம் தருக.

# 9. குமண வள்ளல்

## காட்சி 1

**இடம் :** முதிர மலை அரண்மனை.

**பாத்திரங்கள் :** இளங்குமணன், அவன் நண்பர்கள் உதியன், மதியிலி என்போர்.

**உதியன் :** இளங்குமண, அவைக்களத்தில், ஆடல் பாடல்களின் ஒலி கேட்கின்றதே! என்ன செய்தி?

**இளங்குமணன் :** (வருத்தத்துடன்) என்றும் போலவே இன்றும் புலவர் எவரேனும் வந்திருப்பர்; பொன்னே, மணியே என என் அண்ணனைப் போற்றியிருப்பர்; அதற்குப் பதிலாக இவ்வுபசாரங்கள் நடைபெறும்.

**மதியிலி :** நண்பா, நாட்கள் இவ்வாறே கழிந்துகொண்டிருந்தால், உன் நிலைமை என்னுவது? உன் அண்ணன் கண்டவர்க்குக் கருந்தனத்தை வாரியிறைத்து, கருவூலத்தைக் காலியாக்கிவிடுவானென்பது உறுதி.

**உதியன் :** இதைத்தான் பல நாளும் நண்பனுக்குக் கூறியுள்ளேன்; அவன் செவி சாய்த்தாற்றுனே?

**மதியிலி :** இளங்குமணன் என்ன கல்லா? கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையுமே! அவன் இன்னும் நிலைமையைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை போலும்!

**இளங்குமணன் :** நண்பர்களே, யானும் சிறிது கவனித்துத்தான் வருகின்றேன். பட்டினிப் பாணர்கள் வருவதும், அவர்களுக்குப் பணத்தை

வாரி இறைப்பதும், சோற்றுக்கில்லாப் புலவர்கள் பாடுவதும் அவ்விலையிலாப் பாட்டிற்கு விலை-யுயர்ந்த அணிகலன்கள் அளிப்பதும் யாவும் என் கண்முன்னேதான் நடைபெறுகின்றன. அண்ணன் ஆதிக்கம்! யான் என் செய்வது!

**உதியன்**: நண்பா, அண்ணன் குமணன் குடிகளின் நன்மையைக் கருதாமல், கருவூலம் வெறுமையாவதையும் கருத்திற் கொள்ளாமற் காலங்கழிப்பனேல், இளங்குமணு, இந்நிலையை நேராக்குவது உன் கடமையன்றோ?

**மதியிலி**: ஆம், ஆம்! இளங்குமணன் இள-வரசனன்றோ? இதனை மனத்திற்கொண்டிலனே?

**இளங்குமணன்**: நன்று, நன்று! நண்பர்-களே, அண்ணனை அடக்கச் சொல்லுகின்றீர்களா?

**மதியிலி**: அண்ணனை அடக்குவது ஏன்? அவனை நாட்டைவிட்டே துரத்தலாமே? நாட்டின் நன்மையை நாடாத அரசன் நாட்டிலிருந்து என்ன பயன்?

**உதியன்**: நாடாள்வோர் நாடோடிகளின் நண்பர்களாயின், அவர்களைப் போன்று நாடோடி-களாக மாற வேண்டுவதுதானே?

**இளங்குமணன்**: அண்ணனை நாட்டை-விட்டுத் துரத்திய பின், தம்பி நாடாள்வதா?

**உதியன்**: இளங்குமணு, நீ அரசவமிசத்தில் பிறக்கவில்லையா? நாடாளும் உரிமை உனக்-கில்லையா? அரசாளுந்திறனற்ற குமணன் காடு சென்றால், ஆட்சி செய்யும் வன்மையுள்ள அவன் உடன்பிறந்தோன் அரியாசனம் ஏறவேண்டுவது-தானே?

**மதியிலி**: மதியற்ற செயல் புரியும் மன்னன்

நாடாள்வதினும் காடாள்வதே தக்கது. மதி நலம் வாய்ந்த குமணு, மனத்திட்பம் வேண்டும். மாநிலம் ஆளும் மன்னர் வழிவந்த நீ மயங்குதல் நேரிதோ?

'எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.'

என்ற முதுமொழி அறியாயோ?

**இளங்குமணன்** : யாவும் அறிவேன்! இன்றே செயல் முடிக்கின்றேன்.

**உதியன்** : துணிவுடன் செயலாற்றுதலே புகழ் பெறும் வழி; கருதிய கருமம் கடிதின் முடிப்பாயாக! சென்று வருகின்ருேம்.

## காட்சி 2

**இடம்** : முதிர மலை - ஊர்ப்புறம்.
**பாத்திரங்கள்** : ஆதன், பூதன், புலவர் பெருஞ்சித்திரனர்.

**பூதன்** : தம்பீ, செய்தி அறிவாயா? குமணவள்ளல் நாடு துறந்து காடு சென்றுவிட்டனராமே! என்ன விபரீதம்!

**ஆதன்** : அண்ணே, நீ சொல்வது உண்மையா? அருங்குணச்செம்மல் குமணவள்ளல் காடு சென்றனரா? காரணம் யாதோ?

**பூதன்** : காரணம் பொருமைதான். 'குமணர் எளியவர்க்கு இரங்கிப் புலவருக்குப் பொற்புறு நிதி வழங்கிப் பொருளை வீணே செலவிடுகின்ருர்; பொக்கிஷம் வெறுமையாகும்,' என வீணர் கூறி இளங்குமணனை இத்துரோகச் செயல் செய்யும்படி தூண்டி விட்டனர். அண்ணனரின் அருங்குண-

மறியாத அற்பனுகிய அவன், நம் குமணவள்ளலைக் காட்டிற்குத் துரத்திவிட்டான்.

**ஆதன் :** ஐயோ! நம் அருங்குணவள்ள-லுக்கா இக்கதி நேர வேண்டும்!

**பூதன் :** தம்பீ, நம்மரசர் காடு சென்றதற்-காக வருந்துகின்ருயே! நான் சிறிது நேரத்துக்கு முன் கேட்ட செய்தி உன்னை அருந்துயரில் ஆழ்த்துமே!

**ஆதன் :** என்ன? அண்ணு, அரியாசனத்தில் வீற்றிருக்க வேண்டிய அண்ணல் காட்டின் கற்-றரையில் தங்கவேண்டியவராயினரே! இதனினும் கொடியது யாதுளது? அறுசுவையுண்டியை அரண்-மனையில் அமர்ந்துண்ண வேண்டியவர், காய், கனி, கிழங்குகளை அலைந்துண்ணல் வேண்டுமே! வறியார்க்கு வளநிதி வழங்கிய வள்ளல், தாமே வறியராய் வனம் சென்றுள்ளனரே! என்னே கொடுமை! பாதகன் உள்ளத்தில் பரிவென்பது இல்லையோ?

**பூதன் :** தம்பீ, நம் போன்ருர் வருந்திப் பயன்யாது? 'உடன் பிறந்தே கொல்லும் வியாதி,' என்பர். அது போன்று, அவர் உடன்பிறந்தோனே அவர் உயிர்க்கு உலை வைக்க எண்ணுகின்ருன்!

**ஆதன் :** உத்தமர் உயிர்க்கு உலையா?

**பூதன் :** ஆம், ஆம், அவரது தலையைக் கொணர்பவர்க்கு ஆயிரம் பொற்காசுகள் அளிப்ப-தாக இளங்குமணன் அறிவித்திருக்கின்ருன்.

**ஆதன் :** அந்தோ! என்ன பழிச்செயல் செய்யத் துணிந்தான்!

(புலவர் பெருஞ்சித்திரனுர் அங்கு வருகின்ருர்.)

**பெருஞ்சித் :** (ஆதனை நோக்கி) பழிச்-

செயலா ? குமணவள்ளல் ஆட்சியில் பழிச்செயலா ? ஐயா, என்ன சொல்லுகின்றீர் ?

**ஆதன் :** புலவரே, நீர் உண்மையறியீரோ ? இங்குக் குமணன் ஆட்சியின்று ; இளங்குமணன் ஆட்சியே நடைபெறுகின்றது. இலங்கறிவில்லா ஆட்சியில், பழிச்செயலன்றிப் பிறிதெதனை எதிர்பார்க்கின்றீர் ?

**புலவர் :** ஐயா, பழிச்செயல் என்று எதனைக் குறிப்பிடுகின்றீர் ?

**ஆதன் :** புலவரே, குமணவள்ளல் காடு சென்றுள்ளார் ; அவரைக் காட்டிற்கனுப்பிய பாதகர் அவரைக் கொல்லவும் சூழ்ச்சி புரிகின்றனர்.

**புலவர் :** அந்தோ ! அவரைக் கொல்லச் சூழ்ச்சியா ? அவரைக் கொல்ல யாவர்தாம் முன் வருவர் ?

**பூதன் :** ஐயா, புலவரே, நீவிர் உலகத்தை நன்கு அறியீரோ ? பணம் என்றால் பிணமும் வாய் திறக்குமன்றோ ? குமணன் தலையைக் கொணர்பவருக்கு ஆயிரம் பொற்காசுகள் அளிப்பதாகக் கூறினால், யாவர்தாம் முன் வாரார் ?

**புலவர் :** அண்ணன் தலைக்கு ஆயிரம் பொற்காசுகளா ! இளங்குமணன் இரக்கமற்றவனாகிவிட்டானே ! பழிச்செயல் புரிகின்றானே ! குமணனை நாடி வந்தேன் ; அவனைத் தேடிக் கானகம் செல்கின்றேன்.

(போகின்றார்.)

## காட்சி 3

இடம் : முதிர மலைக் காடு.
பாத்திரங்கள் : குமணன், புலவர், பெருஞ்சித்திரனர்.

**புலவர்** : (தனிமொழி) இறைவா, என் வறுமையைப் போக்க வள்ளல் குமணனை நாடி வந்தேன். வள்ளல் வனம் புகுந்துவிட்டான். அவனை எங்குச்சென்று காண்பேன்! பசித்தவர் முகம் பார்க்கும் பண்புடையாளர் வேறு யாருளர்?

[குமணன் ஒளிப்பிடத்தினின்று வெளியே வருகிருன். புலவர் அவனை வணங்குகிருர்.]

**குமணன்** : புலவரே, வருக! வருக!

**புலவர்** : அண்ணலே, வணக்கம்!

**குமணன்** : புலவரேறே, நாட்டினின்றும் நீங்கிக் காட்டில் மறைந்துறையும் என்னைத் தேடி வந்த காரணம் என்ன?

**புலவர்** : அரசரே, என் வீடு வறுமைக்கு நிலைக்களனுகிவிட்டது. நெருப்பு மூட்டாமல் நாட்கள் பல கழிந்துவிட்டமையின், அடுப்பில் காளான்கள் முளைத்துவிட்டன. என் மனைவி உணவின்றி மெலிந்துவிட்டாள். என் குழந்தையோ, தாய்ப்பாலின்றித் தவிக்கின்றது. என் மனைவி என் முகத்தைப் பார்க்க, யான் உமது முகத்தைப் பார்க்க வந்தேன்.

**குமணன்** : அந்தோ! உங்கள் வறிய நிலையை அறிந்து யான் மிக வருத்தமுறுகிறேன்! இதுகாறும் என்னை நாடியடைந்த நாவலர்களை நலியும் வறுமைப் பிணியைப் போக்கி வந்தேன். என்னை அடைந்த உங்களை வெறுங்கையுடன் வீடு செல்ல

விடுவது எனக்கு மிக்க நாணத்தைத் தருகின்றது. என் செய்வேன்! (சிறிது யோசிக்கின்றான்) புலவரே, என் வேண்டுகோளை நீங்கள் நிறைவேற்ற வேண்டும். என் இளவல் இளங்குமணன் என் தலையைக் கொண்டுவருபவருக்கு ஆயிரம் பொற்காசுகள் அளிப்பதாகப் பறையறைவித்திருக்கிறான். கொலைஞன் என் தலையைக் கொள்ளுமுன் உங்களுக்கு அது உதவுவதாக! இவ்வாளைப் பெற்று, இதனால் என் தலையைத் துணித்து, அதனால் பெறும் பொருளால் உங்கள் வறுமை நீங்குங்கள்.

(உறையினின்றும் வாளை எடுத்து நீட்டுகிறான்.)

**புலவர்** : (குமணனைத் தழுவி) அண்ணலே, ஈயென இரப்போருக்குத் தம் இன்னுயிரையும் கொடுப்பர் ஈகையாளர்; ஈயென இரவாதவிடத்தும் நீர், உம் உயிரை ஈய முன்வந்துள்ளீர்! உமது ஈகைதான் என்னே! இத்தகையாருக்கு இன்னல் இழைப்பாருமுளரே! என் வறுமை நீங்கச் சிரம் உதவும் செம்மலே! உமது வாளைக்கொண்டே என் வறுமை நீக்குவதுடன், உம்மையும் அரியாசனத்தில் அமர்த்துவேன்! இதோ செல்கின்றேன்! உலகம் உள்ளளவும் உமது புகழ் நிலைபெறுவதாக!

[குமணன் வாளைப் பெற்றுக்கொண்டு, பெருஞ்சித்திரனார் வாழைக்கொல்லையிற்சென்று, செவ்வாழையின் அடிமரத்தை வெட்டி, அதனைச் சிற்பி ஒருவனிடம் கொடுக்கின்றார். அவன் அதனால் குமணன் தலை போன்றதொரு போலித்தலையைச் செய்தளிக்கிறான். அப்போலித்தலையினின்றும் குருதி போல நீர் வடிய அதனை இளங்குமணனிடம் எடுத்துச் செல்கின்றார்.]

## காட்சி 4

இடம் : இளங்குமணன் அரண்மனே.
பாத்திரங்கள் : புலவர், வாயிற்காவலன், இளங்குமணன்.

**புலவர் :** வாயிற்காவல, தமையனுரது தலையைக் கொண்டுவந்திருப்பதாகச் சொல்.

**வாயிற்காவலன் :** குமணரின் தலையைக் கொண்டுவந்துவிட்டீரா !



**புலவர் :** ஆம், இதோபார் ! (தலையை மூடியிருந்த துணியை எடுக்கிருர்).

**வாயிற்காவலன்** . புலவரே, போதும் ! போதும் ! அண்ணலின் உயிரைக் கவர்ந்து, அவர் தலையையா கொணர்ந்தீர் ! என்ன செயல் இது !

**புலவர் :** காவல, அரசன் கட்டளைப்படியே செய்தேன். விரைவில் சென்று தெரிவி.

(காவலன் பதைபதைப்புடன் சென்று, இளங்குமணனிடம்)

அரசே, உங்கள் தமையனார் தலையை ஒருவர் கொணர்ந்திருக்கின்றார்.

**இளங்குமணன் :** (திடுக்குற்று) ஆ! அண்ணன் தலையா! ஐயோ! அண்ணா! அண்ணா!

(ஓடி வருகின்றான். புலவர் தலையைக் காண்பிக்கின்றார்.)

**இளங்குமணன் :** ஐயோ! பாவி! அண்ணனைக் கொலை செய்வித்தேனே! அண்ணா! அண்ணா! உன்னை எப்போது காண்பேன்! அற்பர்களின் பேச்சைக் கேட்டு அறிவிழந்தேனே!

**புலவர் :** இளங்குமணா, வருந்தாதே! உன் அண்ணனை உயிருடன் வரச்செய்கிறேன்.

**இளங்குமணன் :** என் அண்ணனை உயிருடன் காண்பேனா! புலவரே, என் அண்ணனை உயிர் பெற்றெழச் செய்வீராயின், இந்நாட்டையே அன்றி, என்னையே உமக்கு உரிமையாக்கிவிடுவேன்!

**புலவர் :** இளங்குமணா, இது உறுதிதானா?

**இளங்குமணன் :** ஐயா, என்னை மீண்டும் கேளாதீர்! இது முக்காலும் உறுதி. விரைவில் என் அண்ணனை உயிருடன் காண்பியுங்கள்.

**புலவர் :** இளங்குமணா, இதோ விரைவில் உன் அண்ணனை உயிருடன் அழைக்கிறேன்.

(விரைவாகச்சென்று, குமணனைக் கண்டு, செய்தியைச் சொல்லி, அவனைத் தம்முடன் அழைத்து வருகிறார்.)

**இளங்குமணன் :** (குமணனைக் கண்டதும்) அண்ணா! அண்ணா! என் பிழை பொறுப்பாய்!

(காலில் விழுந்து வணங்குகிறான்)

**குமணன்** : (தம்பியைத் தூக்கி, மார்புறத் தழுவி) நடந்ததை நினைந்து வருந்தாதே !

**இளங்குமணன்** : அண்ணு, அற்பர்களின் சேர்க்கையால் செய்வதறியாது, உமக்குத் துரோ-கஞ் செய்துவிட்டேன் ! மன்னித்தருள்க !

**குமணன்** : தம்பீ, கழிந்ததை எண்ணி மனங்-கலங்காதே ! தீயார் சேர்க்கையை ஒழித்து, நன்-னெறிச் செல்வாயாக.

**இளங்குமணன்**: அண்ணு, இப்புலவர் பெருந்-தகையால் என் புல்லிய குணம் மாறப்பெற்றேன். புலவரேறே, உங்களுக்கு யான் என்றும் கடமைப்-பட்டுள்ளேன். அறியாமையாற்செய்த அநீதியை அகற்ற நீங்கள் உதவி செய்தீர்கள். இன்று முதல் உங்கள் அறிவுரையைப் பின்பற்றி நடப்பேன்.

**புலவர்** : இளங்குமண, உன் மனம் மாறப்-பெற்றமைக்கு மகிழ்கின்றேன் ! உன் அண்ணன் குணமறியாது, நீ அழுக்காறு கொண்டாய். 'இறைத்தகிணறு நீர்ஊறும்,' என்பது முதுமொழி-யன்றே ! வறியவர்க்கு வழங்குவதனல் பொருள்-வளம் குன்றுவதின்று ; குன்றின்மேலிட்ட தீபம் போன்று கொடுப்போர் புகழ் விளங்கும். இதனை மனத்திற்கொண்டு ஒழுகி வருவாயாக.

**குமணன்** : புலவரே, நீவிர் என் தம்பியின் அறியாமையைப் போக்கியதுடன், எங்களிரு-வருக்குமுள்ள அன்பையும் சிறக்கச்செய்தீர். உமக்கு எம் நன்றி உரியதாகுக. யாம் கொடுப்ப-வற்றை இனிது ஏற்று, உமது இன்னல் நீங்கி வாழ்வீராக !

(குமணன் புலவருக்குப் பொன்னும் பொருளும் ஏராள-மாகக் கொடுத்து அனுப்புகின்ருன்.)

**புலவர் :** அரசரே, இருவீரும் ஒற்றுமையுடன் வாழ்ந்து உயர்வு பெறுவீராக! வணக்கம்!

(செல்கின்றார்.)

**சொற்பொருள் விளக்கம் :**

கருந்தனம் - மிக்கதிரவியம், கருவூலம் - பொக்கிஷம் (நிதி சேமிக்கும்இடம்), ஆதிக்கம் - அதிகாரம், அரியாசனம் - சிம்மா சனம், மதிநலம் - அறிவுத்திறன், துறந்து-நீங்கி, பரிவு-அன்பு, உயிர்க்கு உலைவைத்தல் - கொல்லுதல், புலவரேறு - புலவருள் சிறந்தவர், நாவலர்-நாவன்மை படைத்தவர், இதுகாறும்-இது வரையும், இளவல் - தம்பி, இரவாது - யாசிக்காமல், புல்லிய - அற்பமான, இன்னல் - துன்பம்.

**பயிற்சி :**

1. 'இறைத்த கிணறு நீர் ஊறும்'—இது போன்ற சில பழமொழிகள் எழுதுக.

2. வாரி இறைப்பது, விலையுயர்ந்த, நாடோடிகள், அரியாசனம், பறையறைவித்தல்—இவற்றை வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

3. குமணன் கதையை நடித்துக் காட்டுக.

4. பிரித்தெழுதுக :—ஈயென, அருந்துயர், இன்னுயிர், பிறிதெதனை, பொற்காசுகள்.

**கேள்விகள் :**

1. இளங்குமணன் தன் அண்ணன்மீது அழுக்காறு கொள்ளக் காரணம் என்ன?

2. இளங்குமணன் குமணனுக்கு இழைத்த தீங்கு யாது?

3. காட்டில் குமணனைச் சந்தித்த புலவர் யாவர்?

4. குமணன் புலவரிடம் யாது கூறினன்?

5. புலவர் இளங்குமணன் அறிவு பெறச் செய்த சூழ்ச்சி என்ன?

6. குமணன் தன் நாடு மீண்டும் அடைந்த விதம் என்ன?

7. புலவர் இளங்குமணனுக்குக் கூறிய அறிவுரை யாது?

### கட்டுரைப் பயிற்சி:

குமணன் வரலாற்றைச் சுருக்கி வரைக.

### இலக்கணம்:

உழைப்பால் வந்த உணவை உண்ணலின் சிறந்தது இன்று.—உண்ணலின்—இன் உருபு சேர்ந்து பெயர்ப்பொருளை உறழ் பொருளாக மாற்றியது—ஐந்தாம் வேற்றுமை.

இராமனது வீடு பெரியது—இராமனது—'அது' உருபு சேர்ந்து பெயர்ப் பொருளைக் கிழமைப் பொருளாக மாற்றியது. (கிழமை - உரிமை)—ஆறும் வேற்றுமை.

குமணன் அரண்மனையில் இருந்தான்—அரண்மனையில்-இல் உருபு சேர்ந்து பெயர்ப் பொருளை இடப்பொருளாக மாற்றியது - ஏழாம் வேற்றுமை.

குமண வருக—குமண, பெயர் விளியேற்று வந்தது—எட்டாம் வேற்றுமை.

முதல் வேற்றுமைக்கும் எட்டாம் வேற்றுமைக்கும் தனி உருபில்லை. முதல் வேற்றுமைப்பெயர் திரியாது வரும். விளிப்பெயர் (எட்டாம் வேற்றுமையேற்று வரும்பெயர்) ஈற்றெழுத்துக் கெட்டும், மிகுந்தும், திரிந்தும், ஈற்றயல் எழுத்துத் திரிந்தும் வரும்.

குமணன்—குமண—ஈறு கெட்டது.

குமணன்—குமணன் + ஏ—ஈறு மிகுந்தது.

பிள்ளை—பிள்ளாய்—ஐ, ஆய் எனத் திரிந்தது.

குமணன்—குமணா—ஈறு கெட்டு, ஈற்றயல் எழுத்துத் திரிந்தது.

எட்டு வேற்றுமைகளுக்கும் இப்பாடத்தினின்றும் உதாரணந் தருக.

# செய்யுட்பகுதி

## I. வாழ்த்துப் பகுதி

அருள்பழுத்த பழச்சுவையே! கரும்பே! தேனே!
ஆரமிர்தே! என்கண்ணே! அரிய வான
பொருளனைத்தும் தரும்பொருளே! கருணை நீங்காப்
பூரணமாய் நின்றஒன்றே! புனித வாழ்வே!
கருதரிய கருத்ததனுட் கருத்தாய் மேவிக்
காலமுந்தே சமும்வகுத்துக் கருவி யாதி
விரிவினையுங் கூட்டிஉயிர்த் திரளை யாட்டும்
விழுப்பொருளே! யான்சொலும்விண் ணப்பம்
கேளே. 1

—தாயுமானவர்

தருமமும் ஒழுக்கமும் தவமும் ஞானமும்
கருமமும் ஈதலாற் கருதில் யாதுமோர்
அருமையும் பயனுமொன் றில்லை; ஆதலால்,
இருமையும் துணையெனக்(கு) இயேசு நாமமே. 2

—H. A. கிருஷ்ணபிள்ளை

1. ஆசிரியர் - தாயுமானவர்; பிறப்பிடம் - திருமறைக்-காடு; தந்தை - கேடிலியப்பப்பிள்ளை; தொழில்-விஜய ரகுநாத சொக்கலிங்க நாயகரிடம் கணக்கர். குரு - மௌனகுரு, நிட்டை கூடிய இடம் - இலட்சுமிபுரம்.

அருஞ்சொற்பொருள் :

1. அருள் பழுத்த-கருணை முதிர்ந்த, ஆரமிர்தே-அருமையான அமிர்தமே, அரியவான பொருள் - கிடைப்பதற்கு அருமையான பொருள்கள், பூரணமாய் - குறைவற்றவராய், கருவி - காரணம், விழுப்பொருள் - சிறந்த பொருள்.

2. ஆசிரியர் - கிருஷ்ணபிள்ளை ; பிறப்பிடம் - ரெட்டியார் பட்டி ; சமயம் - வைஷ்ணவம் ; முப்பதாம் வயதில் கிறிஸ்தவரா-யினர் ; தொழில் - சாயர்புரத்தில் ஆசிரியத்தொழில். இவர் கிறிஸ்தவக் கம்பர் எனச் சிறப்பிக்கப்பட்டவர்.

அருஞ்சொற்பொருள் :

ஒழுக்கம் - நன்னெறியில் நடத்தல், தவம் - தன் துன்பம் பொறுத்துப் பிறர்க்குதவி செய்யும் தன்மை, கருமம்-நற்செயல், இருமை - இம்மை, மறுமை.

# II. நீதிப் பகுதி

## 1. நீதி நெறி விளக்கம்

**அ**றம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புறம்கடை நல்இசையும் நாட்டும்—உறுங்கவல்ஒன்(று)
உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியின் ஊங்(கு)இல்லை
சிற்றுயிர்க்(கு) உற்ற துணை. 1

**எ**த்துணைய ஆயினும் கல்வி இடமறிந்(து)
உய்த்துணர்(வு) இல்லெனின் இல்லாகும்;—உய்த்துணர்ந்தும்
சொல்வன்மை இன்றெனின் என்னும்? அஃதுண்டேல்
பொன்மலர் நாற்றம் உடைத்து. 2

**க**லைமகள் வாழ்க்கை முகத்த(து) எனினும்
மலரவன் வண்டமிழோர்க்(கு) ஒவ்வான்—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்(று)இவர் செய்யும் உடம்பு. 3

**மு**ற்றும் உணர்ந்தவர் இல்லை ; ' முழுவதூஉம்
கற்றனம் !' என்று களியற்க ;—சிற்றுளியால்
கல்லும் தகரும் ; தகரா கனங்குழாய் !
கொல்லுலைக் கூடத்தி னல். 4

—குமரகுருபரர்

ஆசிரியர் - **குமரகுருபரர்;** பிறப்பிடம் - **கைலாசபுரம்** என்னும் **ஸ்ரீவைகுண்டம்;** ஐந்து வயது வரை ஊமையாயிருந்து பின்பு முருகரருளால் பாடும் திறன் பெற்றனர் என்பர். சிறுவர்க்காக இந்நூலை எழுதினர்.

**அருஞ்சொற்பொருள் :**

1. வீடு - மோட்சம், பயக்கும் - கொடுக்கும், இசை - புகழ், உறுங்கவல் - துன்பம், ஊங்கு - சிறந்தது.

2. இடன் அறிந்து உய்த்துணர்வு - இடனறிந்து சொற்களைக் கொண்டு கூட்டிப் பொருள் கொள்ளும் உணர்வு, உடைத்து - உடையதாகும்.

3. மலரவன் - பிரமன், வண்தமிழோர் - வளப்பமான சொல்லையுடைய தமிழ்ப் புலவர், மாயா - அழியா, இவர் செய்யும் உடம்பு - இவர் சம்பாதிக்கும் புகழாகிய உடம்பு.

4. முற்றும் - எல்லாவற்றையும், களியற்க - செருக்குக் கொள்ளாதே, கல்லும் - பெரும்பாறைகளும், கொல்லுலைக் கூடம் - கொல்லன் உலைக்களத்திலுள்ள சம்மட்டி.

## 2. நீதி வெண்பா

சிற்றுணர்வோர் என்றும் சிலுசிலுப்பர் ; ஆன்றமைந்த
முற்றுணர்வோர் ஒன்றும் மொழியாரே ;—வெற்றிபெறும்
வெண்கலத்தின் ஓசை மிகுமே ; விரிபசும்பொன்
ஒண்கலத்தின் உண்டோ ஒலி ? 1

பொற்பறிவில் லாதபல புத்திரரைப் பேறலினேர்
நற்புதல்வ னைப்பெறுதல் நன்றாமே ;—பொற்கொடியே !
பன்றிபல குட்டி பயந்ததனால் ஏதுபயன் ?
ஒன்றமையா தோகரிக்கென் றோது. 2

தாமுங்கொ டார்கொடுப்போர் தம்மையுமீ யாதவகை
சேமஞ்செய் வாருஞ் சிலருண்டே ;—ஏமநிழல்
இட்டுமலர் காய்கனிகள் ஈந்துதவு நன்மரத்தைக்
கட்டுமுடை முள்ளெனவே காண். 3

பொன்னும் கரும்பும் புகழ்பாலும் சந்தனமும்
சின்னம் படவருத்தஞ் செய்தாலும்—முன்னிருந்த
நற்குணமே தோன்றும் ; நலிந்தாலும் உத்தமர்பால்
நற்குணமே தோன்றும் நயந்து. 4

### அருஞ்சொற்பொருள் :

1. சிலுசிலுப்பர் - படபடத்துப் பேசுவர், முற்றுணர்வோர் - (நிறைந்து அடங்கிய) பேரறிவுடையோர், ஒண்கலம் - பிரகாசம் பொருந்திய பாத்திரம்.

2. பொற்பு அறிவு - அழகைச் செய்யும் அறிவு, பயந்ததனால் - பெற்றதனால், கரிக்கன்று - யானைக்கன்று, ஓது - சொல்வாய்.

3. ஏமம் நிழல் இட்டு - இன்பத்தைத் தரும் நிழலைச் செய்து, கட்டும் உடை முள் - சூழ்ந்த உடைவேல முள், சேமம் செய்வார் - பாதுகாப்பவர்.

4. சின்னம்பட - வருத்தப்படும்படி, முன்னிருந்த நற்குணம் - ஒளி இனிப்பு வாசனையாகிய நற்பண்புகள், நலிந்தாலும் - வருத்தினாலும், நயந்து - மிகுந்து.

## 3. பழமொழி

'உரைமுடிவு காணுன் இளமையோன்,' என்ற
நரைமுது மக்கள் உவப்ப—நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன் ; குலவிச்சை
கல்லாமற் பாகம் படும். 1

நாடறியப் பட்ட பெருஞ்செல்வர் நல்கூர்ந்து
வாடிய காலத்தும் வட்குபவோ ?—வாடி
வலித்துத் திரங்கிக் கிடந்தே விடினும்
புலித்தலையை நாய்மோத்தல் இல். 2

நெறியால் உணராது நேர்மையும் இன்றிச்
சிறியார் எளியரால் என்று—பெரியாரைத்
தங்கள்நேர் வைத்துத் தக(வு)அல்ல கூறுதல்
திங்களை நாய்குரைத் தற்று. 3

'எமக்குத் துணையாவார் வேண்டும்,' என் றெண்ணித்
தமக்குத் துணையாவார்த் தாம்தெரிதல் வேண்டா ;
பிறர்க்குப் பிறர்செய்வ(து) உண்டோ? மற் றில்லை ;
தமக்கு மருத்துவர் தாம். 4

—முன்றுறையரையனர்

ஆசிரியர் முன்றுறையரையனர் ; பாண்டி நாட்டின் ஒரு பகுதியை ஆண்ட சிற்றரசர் ; ஈற்றில் ஒவ்வொரு பழமொழி கொண்ட 400 பாடல்கள் கொண்டது பழமொழி நானூறு என்னும் நூல்.

அருஞ்சொற்பொருள் :

1. உரை முடிவு - வழக்குரையின் முடிவு, நரை முது மக்கள் - நரைத்த கிழவர், சொல்லால் - (வழக்குரைத்தவர்களுடைய) சொல்லைக் கொண்டே, முறை செய்தான் - நீதி வழங்கினன், பாகம்படும் - நன்கு அமையும்.

2. நல்கூர்ந்து - வறுமையடைந்து, நாடு - உலகம், வட்குபவோ - தாழ்வரோ, திரங்கி - சுருங்கி, மோத்தல் - மோந்து பார்த்தல்.

3. நீர்மை - நற்குணம், தகவுஅல்ல-தகாத வார்த்தைகள், திங்கள் - சந்திரன்.

4. துணையாவார் - உதவி செய்பவர், தெரிதல் - தேர்ந்து கொள்ளுதல், மருத்துவர் - வைத்தியர்.

## 4. குமரேச சதகம்

### நோய்க்குக் காரணங்கள்

கல்லினல், மயிரினல், மீதூண் விரும்பலால்,
கருதிய விசாரத்தினல்,
கடுவழி நடக்கையால், மலசலம் அடக்கையால்,
கனிபழங் கறியுண்ணலால்,
நெல்லினல், உமியினல், உண்டபின் மூழ்கலால்,
நித்திரைகள் இல்லாமையால்,
நீர்ப்பகையி னல்பனிக் காற்றிலுடல் நோதலால்,
நீடுசரு கிலையூறலால்,
வல்லிரவி லேதயிர்கள் சாகாதி உண்ணலால்
வன்பிணிக் கிடமென்பர்காண்
மயிலேறி விளையாடு குகனே!புல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே !

—குருபாததாசர்

ஆசிரியர்—குருபாத தாசர். இவரது இயற்பெயர் முத்து மீனாட்சிக் கவிராயர் என்பது. இவர் சைவ வேளாளர்; இடம்—திருப்புல் வயல்; அங்கு எழுந்தருளிய குமரக் கடவுள் மீது பாடப்பட்ட இந்நூல் நூறு செய்யுட்களைக் கொண்டது.

அருஞ்சொற்பொருள் :

கல், மண் - உணவிற்சேரும் கல்லும் மண்ணும், மிதூண்- உணவு செரிக்கு முன் உண்ணுதல், விசாரம் - கவலை, கனிபழம் கறி - பழைய (அழுகிய) பழம், பழைய கறி, நெல் உமி - சோற்றுடன் சேரும் நெல்லும் உமியும், நீர்ப்பகை - உடலுக்கு ஒவ்வாத நீர், பனிக்காற்று - பனியுடன் சேர்ந்த காற்று, நோதல் - வருந்துதல், சாகாதி - இலைக்கறி முதலியவை, வன்பிணி - கொடிய நோய்.

## 4. அறப்பளீசுர சதகம்

### உத்தமர்கள்

அடைக்கலம் எனத்தேடி வருவோர் தமைக்காக்கும்
அவனே மகாபுருடனும் ;
அஞ்சாமல் எதுவரினும் எதுபோகி னுஞ்சித்தம்
அசைவிலன் மாதீரனும் ;
தொடுத்தொன்று சொன்னசொல் தப்பாது செய்கின்ற
தோன்றலே மாராசனும் ;
தூறிக் கலைக்கின்ற பேர்வார்த்தை கேளாத
துரையே மகாமேருவாம் ;
அடுக்கின்ற பேர்க்குவரும் இடர்தீர்த்(து) இரட்சிக்கும்
அவனே மகாத்யாகியாம் ;
அவரவர் தராதரம் அறிந்துமரி யாதைசெயும்
அவனே மகாஉசிதனும்.

அடர்க்கின்ற முத்தலைச் சூலனே ! லோலனே !
அமலனே ! அருமைமதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதேவனே !

—அம்பலவாணக் கவிராயர்

ஆசிரியர்—அம்பலவாணக் கவிராயர் ; பிறப்பிடம்—சோழ நாட்டிலுள்ள தில்லையாடி; காலம்—200 வருஷங்களுக்கு முன். நூல்—சதுரகிரி என்னும் தலத்தில் அறப்பளீசுரம் என்னும் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள சிவபிரான் நாமத்தைச் செய்யுள் தோறும் அமைத்துப் பாடப்பெற்ற நூறு செய்யுள் கொண்டது.

அருஞ்சொற்பொருள் :

அடைக்கலம் - தஞ்சம், காக்குமவன் - காப்பவன், சித்தம் - மனம், ஒன்று தொடுத்து - ஒன்றைச் சொல்ல ஆரம்பித்து, தோன்றல் - பெரியவன், தூறி - நிந்தித்து, கலைக்கின்ற - வேறுபடுத்துகின்ற, துரை - பிரபு, தியாகி - கொடையாளி, தராதரம்- ஏற்றத் தாழ்வு, உசிதன் - யோக்கியன்.

## III. கதைப் பகுதி

### ஊதாரியான மகன் உணர்வு பெற்றது

ஒருவனன் புடைய தந்தைக்(கு)
ஓரிரு புதல்வர் உள்ளார் ;
இருவரில் இளையான், ' ஐய ;
என்னெரு பாகம் எற்குத்
தருக,' என்(று) இரந்து கேட்பத்
தந்தைதன் உரிமை யாவும்
நிருவிகற் பாகப் பங்கிட்(டு)
உதவினன் நேர்மை யாக. 1

கைப்பொருள் கண்டான் ; தந்தை
கரைந்தசொற் பொருளைக் காணன்
மெய்ப்பொருள் அறியான் ; உள்ளம்
விழைந்தசிற் றின்ப மாயப்
பொய்ப்பொருள் நச்சி ஓடிப்
புறம்புபோய்த் தந்தை ஈந்த
அப்பொருள் இழந்தான் ; அந்தோ !
அகதியா யினன்சின் ளுளில். 2

அங்கொரு குடும்பி தன்னை
அடுத்(து)அவன் பன்றி மேய்த்துத்
திங்களோர் இரண்டு மூன்று
செல்லஅத் தேசம் எங்கும்

வெங்கொடும் பஞ்சம் நேர்ந்து
வெதுப்பிடும் பசிக்(கு)ஆற் றுனய்
நுங்கினன் பன்றிக்(கு) ஊட்டும்
நொறுங்குகுற் றுமித்த விட்டை. 3

குற்றுமித் தவிடும் கிட்டாக்
கொடும்பஞ்சம் அதிக ரிக்கச்
சற்றுளம் தெளிந்தா னுகிச்
சஞ்சலித்(து) அழு(து),'என் தந்தைக்(கு)
உற்றஊ ழியர்அ னேகர்
உண்டுதேக் கெறிய, யான்ஓர்
துற்(று)உண(வு) இன்றி ஆவி
சோர்வல்;இஃ தென் துர்ப் புத்தி. 4

'புகலொன்றும் இல்லேன்,' என்னுப்
புத்தியில் பிழையை உன்னி
மிகவுளம் உடைந்து நைந்தான் ;
மெய்ம்மனஸ் தாபங் கொண்டான்.
'தகவுடைத் தாதை பக்கல்
சார்குவ னேல்,தான் பெற்ற
மகவெனப் பரிவன் அல்லால்
மறுத்திடான்,' எனத்தே றுற்றுன். 5

'ஒல்லையே எழுந்தான் ; தந்தை
உத்தம குணமுன் ஈர்க்க
அல்லல்செய் பசிபின் உந்த
அடுத்தனன் ; அறிந்து, தந்தை

வல்லேவந்(து) அணேத்து முத்தி
மகிழ்ந்தனன் ; மகவா சைக்(கு)ஓர்
எல்லேயும் உளதோ மைந்தன்
ஏத்தனே பிழைசெய் தாலும் ? 6

'எந்தையே ! எந்தை யே !'என்(று)
ஏங்கிநெட் டுயிர்த்துக் கண்ணீர்
சிந்திநொந்(து), 'உமக்கு முன்னும்
தெய்வத்துக் கெதிரு மாகப்
புந்தியற்(று) அளவில் பாவம்
புரிந்தனன் ! இனியான் உந்தம்
மைந்தன்என்(று) உரைக்கத் தானும்
அபாத்திரன் ! மதியொன்(று) இல்லேன்! 7

'ஐய!மன் னிக்கச் சித்த
மாயின்மற்(று) அளிய னேன்யான்
உய்யுமா(று) அருளி, நும்பால்
ஊழியத்(து) ஒருவ னுக்கி,
வையகத்(து) இருத்து(க)' என்னு
வாய்திறந்(து) அரற்றி நிற்ப,
'நையல்,'என்(று) அருளிற் கூட்டிச்
சென்றனன் அகத்துள் நண்பால். 8

'மகன்இவன் மரித்தான் ; இன்னே
மறுத்துயிர் பெற்ருனுகத்
தகவுடை விருந்(து)எ மர்க்குச்
சமைக்க'எனப் பணித்து மைந்தற்(கு)

உவகையின் வஸ்தி ராதி
உடுத்(து)அருங் கலமும் பூட்டிப்
புகரறு மகிழ்கொண் டாடி
இருந்தனன் புதல்வ ளேடும். 9

இரட்சணிய யாத்திரிகம்] [H. A. கிருஷ்ணபிள்ளை

ஆசிரியர் H. A. கிருஷ்ணபிள்ளை (1827—1900). இந்நூல் பரதேசியின் மோட்சப் பிரயாணம் (Pilgrim's Progress) என்ற ஆங்கில நூலைத் தழுவி எழுதப்பட்டது; ஜீவாத்துமாவின் மோட்சப் பிரயாணத்தைப்பற்றிக் கூறுவது.

அருஞ்சொற்பொருள் :

1. எற்கு - எனக்கு, இரந்து - கெஞ்சி, நிருவிகற்பாக - வேறுபாடின்றி.

2. கரைந்த - கூறிய, நச்சி - விரும்பி, புறம் - வெளிநாடு, அகதி - ஆதரவற்றவன்.

3. குடும்பி - குடும்பஸ்தன், திங்கள் - மாதம், வெதுப்பிடும் - வருத்தும், நுங்கினுன் - விழுங்கினுன்.

4. கிட்டா - கிடைக்காத, சஞ்சலித்து - வருந்தி, தேக்கெறிதல் - தெவிட்டுதல் (ஏப்பமிடல்), துற்று உணவு - ஒரு வாய் உணவு.

5. புகல் - அடைக்கலம் புகுவதற்குரிய இடம், புந்தி - புத்தி, பரிவன் - அன்புகூர்வன்.

6. ஒல்லே - விரைவாக, ஈர்க்க - இழுக்க, உந்த - தள்ள, அடுத்தனன் - சமீபித்தனன், அல்லல் - துன்பம், வல்லே - விரைவாக.

7. நெட்டுயிர்த்து - நீண்ட பெருமூச்சு விட்டு, அபாத்திரன் - தகுதியற்றவன், எந்தை - என் தந்தை.

8. சித்தம் - மனம், வையகம் - பூமி, அரற்றி - புலம்பி, நையல் - வருந்தாதே.

9. எமர்க்கு - எம்மவர்க்கு, உவகை - விருப்பம், அருங்கலம் - ஆபரணம், புகரறு - குற்றமில்லாத.

# IV. பல்சுவைப் பகுதி

## 1. நீர்மோர்

காரென்று பேர்படைத்தாய் ககனத் துறும்போது;
நீரென்று பேர்படைத்தாய் நீணிலத்தில் வந்ததற்பின்;
வாரொன்று பூங்குழலார் ஆய்ச்சியர்கை வந்ததற்பின்
மோரென்று பேர்படைத்தாய் முப்பேரும் பெற்றுயே!

## 2. ஆட்டுக்கும் கதவுக்கும் சிலேடை

செய்யுட் கிடைமறிக்கும்; சேர்பலகை யிட்டுமுட்டும்;
ஐயமற மேல்தாள் அடர்க்குமே;—துய்யநிலே
தேடும் புகழ்சேர் திருமலேரா யன்வரையில்
ஆடும் கதவுநிக ராம்.

—காளமேகப் புலவர்

## 3. எழுத்துச் சுருக்கம் (மதுரை)

முன்னமோர் ஊரின் பேராம்;
முதலெழுத்(து) இல்லா விட்டால்
நன்னகர் மன்னன் பேராம்;
நடுவெழுத்(து) இல்லா விட்டால்
கன்னமா மிருகப் பேராம்;
கடையெழுத்(து) இல்லாவிட்டால்
உன்னிய தேனின் பேராம்;
ஊரின்பேர் உரைசெய் வீரே.

அருஞ்சொற்பொருள்:

1. ககனம் - ஆகாயம், கார் - மேகம், பூங்குழலார் - அழகிய கூந்தலையுடையவர், முப்பேர் - மேகம், நீர், மோர் என்னும் மூன்று பெயர்.

2. செய் உள் கிடை மறிக்கும் - வயலினுள் (எருவின் பொருட்டு) கிடைமறிக்கும், செய் உட்கு இடை மறிக்கும் - வீட்டுக்கிடையே இடப்பட்டு வருவோரைத் தடுக்கும், சேர்பலகை இட்டுமுட்டும் - பொருந்திய பலகைகளைக் கொம்பினூற் குத்தி முட்டும், ஒன்றற்கொன்று பொருத்தமான பலகைகளைக் கொண்டு முட்டிச் செய்யப்படும், ஐயம் அற மேல் தாள் அடர்க்கும் - சந்தேகமற மிகுதியாகிய ஊக்கத்தோடு போர் புரியும், சந்தேகமறத் தன்மீது தாளிடப்பட்டிருக்கும்; துய்ய நிலைதேடும் - பரிசுத்தமான இருக்கையைத் தேடும், அழகாகிய வாசற்காலை விரும்பும்.

3. ஊரின் பெயர் - மதுரை, துரை, மரை, மது.

## 4. பயிர் விளைவு

பதிந்த நடவுதேறிப் பரப்புமேறிப்
பசந்து குருத்துமேன்மேற் பரந்துசெறிந்து
முதிர்ந்த தமிழிசைக்கு முடியசைக்கும்
முதல்வர்எனத் தழைத்து முதல்குழைந்தே
பொதிந்த பொதியைநீட்டிப் பூட்டிக்காட்டிப்
புரப்போர்பொன் இணங்குகை போலவணங்கி
எதிர்ந்த கதிர்முளைத்தே இடைபழுத்து
ஏற்ற விளைவுதோற்றம் தோற்றியதே. 1

முறுக விளைந்தவாறு முற்றுந்தேற்ற
முக்கூடற் பண்ணைக்காரன் முன்புகூற
மறுபடி யவன்சொன்ன பகைநன்றென்ன
மள்ளர் மலரும்நாடி வயலிற்கூடி
உறுவதெய்வ நிலைபோற்றி உரிமைசாற்றி
ஓங்குநாட் கதிர்கொய்தார் உவகைசெய்தார்
நிறுவி நிறைதெரிந்தார் நெருங்கிக் கதிரரிந்தார்
நிரப்பி யரிகளெங்கும் பரப்பினரே. 2

கடிதிற்புரி முறுக்கிக்கதிர் கட்டியிறுக்கிக்
கட்டினகட் டெடுப்பர் களத்தில்விடுப்பார்;
நெடிதிற்சுமை கள்எடுப்பார் நிலைப்போர்வைப்பார்;
நின்றபோ ரைச்சரிப்பார்; நிலத்தில்விரிப்பார்;
பிடியிற் பகடணைப்பார்; பிணையிற்பிணைப்பார்;
பிணையல் விடத்தொடுப்பார்; பெற்றுக்கொடுப்பார்;
பொடிவைக்கோ லைத்தவிர்ப்பார் பொலியைக்குவிப்பார்;
பொலிதூற்றி யாற்றிப்பொலி பொலியென்றளப்பார். 3

முக்கூடற்பள்ளு] [என்னயினுப்புலவர்

ஆசிரியர் - வேலான் சின்னத்தம்பி முத்துப் புலவர் என்ற என்னயினுப் புலவர்.

நூல் - பயிர்த் தொழில் செய்து வரும் பள்ளர் வாழ்க்கையைக் கூறும் நூல்.

அருஞ்சொற்பொருள்:

நாற்றுப்பறித்து, நடவு ஆகி, பயிர் நன்ருய் விளைந்து, அறுவடை செய்து, போரேற்றுவதைக் கூறுகின்றது.

பதிந்த - நட்ட, பசப்பு - பசுமை, முதல்வர் - திருமால், பொதி - கதிர்த்தொகுதி, இணங்குகை - கொடுத்தல், நாட்கதிர் கொய்தல் - நல்ல நாளில் கதிர் அறுக்க ஆரம்பித்தல், அரி - அரிந்த கதிர்த்தொகுதி, பிணை - பிணையல், பொலி - தூற்ருத நெற்குவியல்.

TB 031(Y) N58
ஸ்ரீ ஆவணக்காப்பக நூலகம்
88928

LC
A 1172
356
2.7-64
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
30 MAY 1958
MADRAS

# SELVAN SENTAMIL VACHAKAM

FORM II—PART II

AUTHOR :
G. MICHAEL PILLAI, M.A.

EDITOR :
MAHAVIDWAN M. V. VENUGOPAULA PILLAI

JEGASELVAN & CO.,
PUBLISHERS
NAGERCOIL :: TIRUCHI

*Copyright*]

[*Price* : *As.* 11 / *nP.* 69